REGISTERED No. M. 6165. அணா 2

1106

# பத்ஹுல் இஸ்லாம்

# FATH-HUL-ISLAM

மாத பத்திரிகை

1106
3-54

அக்டோபர் 1954.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
27 SEP 1954
MADRAS


| விஷயம். | பக்கம். |
|---|---|
| நம் வாழ்க்கைப் படகு மூழ்கலாமா? ... | 1 |
| பிள்ளைகள் பொய் பேசும் வழக்கம் ... | 7 |
| இஸ்லாம் தரும் இனிய போதனை (டி. எப். ஆர். மஅூலி ஸாஹிப் (பாகவி) ... | 13 |
| காஜா நிஜாமுத்தீன் ஔலியா ஜீவிய சரித்திரம் (அய்யம் பேட்டை S. அப்துல் ரஜாக் சாஹிப்) | 19 |
| இரத்தச் சின்னம் (தொடர் கதை) | 23 |
| ஹாத்திம் தாயீ வாழ்க்கை வரலாறு (டி. எப். ஆர். மஅூலி சாஹிப் (பாகவி) .... | 30 |


பத்ஹுல் இஸ்லாம் ஆபீஸ் :
20, ஹைரோட், திருவல்லிக்கேணி,
மதராஸ் 5.

Q7 N24 FI
N54
187835

# பத்ஹுல் இஸ்லாம்.

சந்தா விபரம்: இந்தியா, பாகிஸ்தான், ஸிலோனுக்கு

| | | |
|---|---|---|
| வருஷ சந்தா | ரூ. | 1–8–0 |
| தனிப் பிரதி | அணா. | 0–2–0 |
| மற்ற வெளி நாடுகளுக்கு வருஷ சந்தா | ரூ. | 2–0–0 |

எல்லா ஊர்களிலும் ஏஜெண்டுகள் தேவை. எல்லா விஷயங்களுக்கும் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர்,

பத்ஹுல் இஸ்லாம்,

20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ் 5.


## அறபு தஃலீமுல் புர்கான் பீ எஸ்ஸர்னல் குர்ஆன்

இது சிறு குழந்தைகள் அரபி ஓத சுலபமாய் கற்றுக் கொள்ள, புதிய முறையில் எழுதியுள்ள அரபி காயிதா. இதில் ஒவ்வொரு பாடத்திற்கு முன்பும் அந்த பாடத்தை குழந்தைகளுக்கு எவ்வாறு கற்றுக் கொடுக்க வேண்டுமென்ற ஒஸ்தாத்மார்களுக்கு குறிப்பும் அறபுத் தமிழில் போடப்பட்டுள்ளது. இதை அழகாக பெரிய எழுத்தில் எழுதி போட்டோ பிளாக் செய்து கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. இரண்டு பாகங்கள் சேர்ந்தது விலை அணா. 6

எஸ்ஸர்னல் குர்ஆன் லாகூர் ஸ்டைல் பெரியது விலை அணா. 10

மேற்படி சிறியது விலை அணா. 6

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,

நெ. 20, ஹை ரோட், திருவல்லிக்கேணி, மதருஸ், 5.

الاسلام

# பத்ஹுல் இஸ்லாம்.

## அக்டோபர் 1954.

## நம் வாழ்க்கைப் படகு மூழ்கலாமா ?

மனிதர்களின் வாழ்வு சமுத்திர யாத்திரைக்கு ஒப்பானது. மாந்தர் எல்லோரும், வாழ்வு முறையில் ஒன்றுபட்டு, கட்டுப்பாடு என்னும் படகில் ஏறிக்கொண்டு, லக்ஷிய மார்க்கத்தில் குறித்த இடம் போய்ச் சேரவேண்டியவர்களாவர். அங்ஙனம், வாழ்க்கைப்படகு நீரில் மிதந்து போய்க்கொண்டிருக்கும் போது, படகில் போகும் எல்லோருமே, ஜாக்கிரதையாய் இருக்க வேண்டியிருக்கிறது ஒவ்வொருவர் மீதும் பொறுப்பு இருக்கிறது. படகில் எங்கேனும் ஓட்டை ஏற்பட்டுவிடுகிறதா என்று யாவரும் கவனித்துக் கொண்டிருக்க வேண்டும். போகும் பேர்வழிகளில் எவனேனும் ஒருவன், அறியாத்தன்மையாலோ, விஷமத்தனத்தாலோ, அந்தப்படகில் ஓட்டைசெய்து பின்னப்படுத்துவதாக வைத்துக்கொள்வோம். அதை மற்ற பிரயாணிகள் பார்த்துக்கொண்டு சும்மா யிருந்து விட்டால், அதன் விபரீத முடிவு யாதாகும்? படகில் தண்ணீர் ஏறி படகு கவிழ்ந்து, எல்லோரும் நீரில் மூழ்கித் தத்தளித்து புரண்டு மடிய வேண்டியதுதான்.

இந்த உதாரணம் நம் சமுதாய வாழ்வுக்கு மிக பொருத்தமானதாய் இருக்கிறது.

### மூன்று வகை மக்கள்.

லோக வாழ்விலும், சமூக வாழ்விலும் நம் மக்கள் பொதுவாக மூன்று வகையினராகப் பிரிந்து காணப்படுகின்றனர்:

(1) சமூகத்துக்கு கேடுகளை உண்டாக்கும் சுயநலப் பேர்வழிகள்; இன்னோர், அனாசாரங்களையும் அட்டூழியங்களையும் உற்பத்தி செய்பவர்கள்; அதைப் பரத்திவைக்கவும் செய்வார்கள்.

(2) இன்னொரு சாரார் தீயகாரியங்களையும் அனாசார அட்டூழியங்களையும் சுயமே உற்பத்தி செய்பவர்களல்ல; ஆனால், பிறர் அட்டூழியங்

களும் அதிக்கிரமங்களும் புரிந்து கொண்டிருக்குங்கால், அதை விலக்கி ஒழிக்க முன்வராமல், தைரியங்கொள்ளாமல், சும்மா வேடிக்கை பார்த்துக்கொண்டு இருந்து விடுவார்கள்.

(3) மூன்றாவது கூட்டத்தினர் மகா உத்தமர்கள். இன்னோர் சுயமே அனுசார அட்டூழியங்களில் சம்பந்தப்படவும் மாட்டார்கள்; தீயகாரியங்களைப் புரியவும் மாட்டார்கள். அத்துடன், பிறர் தீய காரியங்கள் செய்வதைப் பார்த்து வெறுத்து, அதைத் தமது சக்திக்கியைந்த விதத்தில் விலக்கவும், பிறருக்கு நல்ல புத்திமதிகளைச் சொல்லவும் எல்லாவித முயற்சிகளையும் செய்யும் நல்லோர்களாவர்.

முதலாவது கூட்டத்தினர் மிகத்தீயவர்கள். அல்லாஹ்வுக்கு விரோதமாய், உலகில் புரட்சிக்காரியங்களை செய்பவர்கள். அல்லாஹ்வுடைய கோபத்துக்கும் அதிருப்திக்கும் ஆளாகி மடிபவர்கள். பரலோக வாழ்வில் தீராத சஞ்சலத்தை யடைபவர்கள். வேதனையும் நொம்பலமும் நிறைந்த நரகலோகத்துள் வீழ்பவர்கள்.

மூன்றாவது கூட்டத்தினர் மிகமிக நல்லவர்கள். அதாவது, சமூகப் பற்றுடையவர்கள்; தங்கள் கடமையை உணர்ந்தவர்கள். அல்லாஹ்வுக்குப் பயந்து நடந்து கொள்பவர்கள். தம்மைப்போல் பிறரும் நல்வழியில் நடந்து, நல்ல கதி பெறவேண்டுமென்ற உத்தம நோக்கமுடையவர்கள். இன்னோர், நன்மையை ஏவி தீமையை விலக்கும் மூமின்களின் வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள். ஆண்டவனுடைய சந்தோஷத்தையும் திருப்தியையும் பெற்று, நற்கதியடைபவர்கள். பரலோக வாழ்வில் அழிவிலாத சாந்தியும் சுகமும் பெற்றுய்பவர்கள்.

இரண்டாவது கூட்டத்தினர்தான் குறிப்பிடத்தக்க பேர்வழிகள். இன்னோர் சுயமே தீங்குச்செய்யாவிடினும், சுயமே நன்மை செய்யாவிடினும், பெரியதொரு பொறுப்பி லிருந்து நழுவிப்போகப் பார்ப்பவர்கள்.

## படகைத் துளைப்பவன் யார்?

ஒருவன் படகைத் துளைத்து துவாரம் செய்கிறான் என்று வைத்துக்கொள்வோம். அதே படகில் பிரயாணம் செய்யும் இதர மாந்தரில் பலர், தங்கள் தங்கள் காரியாதிகளில் மூழ்கிக்கிடக்கிறார்கள். ஆனால் ஒரு சிலர் மட்டும் பொறுப்பில்லாமல் இருப்பர். மேலே சொல்லிய வண்ணம், படகைத்துளைத்து அதில் ஓட்டைப்போடும் அக்கிரமக்காரப் பேர்வழியை பார்த்துக் கொண்டு சும்மா இருக்கும் இம்மூன்றாந்தரப் பேர்வழியைப்பற்றித்தான் பெரிதும் கவலைப்பட வேண்டியிருக்கிறது.

படகில் ஓட்டையை உண்டாக்கும் பேர்வழி மதியீனத்தாலோ, முட்டாள் தனத்தாலோ அப்படிப்பட்ட நாசவேலையை செய்கிறான்.

187035

ஆனல் அதைப் பார்த்துக்கொண்டு சும்மா இருப்பவன், எப்படிப்பட்ட ரகத்தைச் சேர்ந்தவன் என்பதை யோசித்துப் பாருங்கள். "படகில் அவன் ஓட்டைப் பண்ணி துளை போடட்டுமே, நமக்கென்ன?" என்று இவன் இருந்து விடுவானனல், இதன் முடிவு என்னகும்? சிறுகச் சிறுக படகில் தண்ணீர் ஏறி, நடுக்கடலில் படகு மூழ்கி, எல்லோரும் தத்தளித்து வீழ்ந்து மூச்சுத்திணறி மாண்டு மடிந்துப்போக வேண்டியதுதான்.

படகைத் துளை போடுபவனைவிட, அதைப் பார்த்துக் கொண்டு நமக்கென்ன வென்று சும்மா கிடக்கிறனே அவன் தான் மகாத் தீயவன். கெடுதி செய்பவனை தடுத்து விலக்கவோ, சொல்லி நிறுத்தவோ சக்தி இருந்தும் ஒருவன், சமூக காரியங்களில் பொறுப்பற்றதனமாய் இருப்பானனல் இவன் அவனைவிட மகாக் கெடுதலானவனகவே கருதப் படுவான்.

## பகுத்தறிவாளன் செயல் யாது?

பொதுப்படையாக, உலகில் சில விசித்திரமான மனப்பான்மையுள்ள ஜனங்களும் இருக்கிறர்கள். இவர்களின் வாதமே நூதனமாய் இருக்கும். இன்னேர் பகுத்தறிவு உடையவர்கள் தான்; எது நன்மை எது தீமை என்ற பாகுபாடும் அறிந்தவர்கள் தான். இன்னேர், இரவும் பகலும் தங்களுடைய சொந்த விவகாரங்களிலேயே மூழ்கிக் கிடப்பார்கள். தொழுகை, நோன்பு, முதலிய நற்காரியங்கள் புரிவதில் தவற மாட்டார்கள். பொதுவாக, அல்லாஹ்வுக்கு மாறுபாடான தீய கருமங்களைச் செய்ய மாட்டார்கள். பிற ஜனங்களுடைய நலன் இடர்களில் இவர்கட்கு அக்கறை இராது. 'யார் எப்படிப் போனல் நமக்கென்ன? யார் எக்கேடு கெட்டால் நமக் கென்ன?' வென்று சும்மா இருப்பார்கள்.

இப்படிப் பட்டவர்களை நாம் நல்லவர்கள் என்று சொல்ல முடியாது. நடுக்கடலில் மக்களை சுமந்து கொண்டு போகும் நல்ல படகில், துளை போட்டு ஓட்டை செய்யும் அக்கிரமக்காரப் பேர் வழியை கண்ணல் பார்த்துக் கொண்டு, எவன் எக்காரியம் செய்தால் நமக்கென்ன வென்று வாய் பொத்திக் கொண்டும் கைகட்டிக் கொண்டும் சும்மா இருக்கும் பேர்வழியை பகுத்தறிவாளன் என்று சொல்ல முடியுமா? தண்ணீர் ஏறி நடுக்கடலில் படகு மூழ்கும் போது, இந்த சோம்பல் பேர்வழியும் கூடவே சேர்ந்து மூழ்கத்தானே நேரிடும்! பகுத்தறிவாளனன இவன், இதை ஏன் உணர்ந்து பார்க்கக் கூடாது? எனவே, ஒருவன் சுயமே தன் கரத்தால் தீங்குச் செய்யாவிடினும், தீங்கு செய்பவனைப் பார்த்துக் கொண்டு சும்மா இருந்தாலும், இவனும் தீங்குச் செய்பவனுடன் சம்பந்தப்பட்டவனே யாவான். ஆதலில் அவன் அடையும் தன்மையில் இவனுக்கும் பங்கு உண்டு.

எனவே பகுத்தறிவாளன் செயல், நன்மையைப் பற்றி பிறர்க்கு உபதேசம் செய்வதும், தீமையான காரியங்களி லிருந்து பிறரைத் தடுத்து நிறுத்தி நற்காரியப் பொறுப் பேற்பதேயாகும். எண்ணமும் செயலும் பரிசுத்தமாய் வைத்துக் கொள்வதோடு, சமூக நலவிஷயங் களில் பொறுப்புடன் நடந்து கொள்பவன் தான் உத்தமனும் நல்லவனு மாவான்.

## குடும்பக் காரியங்களில் பொறுப்பு.

மனித வாழ்க்கையானது, தனிப்பட்ட வாழ்க்கையல்ல. தன் வரையில் தன் காரியத்தைப் பார்த்துக் கொண்டு வாழும் மிருக வாழ்வுப் போன்றதல்ல மனித வாழ்க்கை. பொதுவாக மனிதனுனவன், வீட் டார், குடும்பத்தார், ஜாதியார், இனத்தார், சமூகத்தார், ஊரார் எல் லோரையும் அன்வயித்துக் கொண்டு, அனைவருடனும் சேர்ந்து வாழ்ந்து, பிற நலன்களில் பரஸ்பரம் பொறுப்புடன் வாழ வேண்டியவனுனவன்.

உலகில் இருந்துகொண்டு, ஊரில் வாழ்ந்து கொண்டு, குடும்பத் தில் கலந்து கொண்டு, மாந்தன் எப்படி தனிப்பட்ட வாழ்க்கை நடதத முடியும்? சேர்ந்து வாழ்வதில் தான் சிறந்த வலிமை இருக்கிறது. சேர்ந்து உழைப்பதால் உலகில் பெரிய காரியங்கள் உண்டாகின்றன. பெரிய பெரிய காரியங்களை மனிதன் உலகில் சாதித்து விடுகிறுனே, அதனை அவன் தனிப்பட்ட முறையில் இருந்து தனியாகவா செய்து முடித்து விடுகிறுன்? இல்லை.

எனவே, ஒருவன், மற்றவர்களுடன் சேர்ந்து அன்வயித்துப் போகாமல், தனியாக இருந்து இத்தாணியில் உயிர் வாழ்வ தென்பது முடியாத காரியமாகும். ஆக்கக் காரியங்களில் மனிதன் பிறருடைய உதவியை நாடியிருப்பது போலவே, அழிவுக் காரியங்களிலும் மனிதன் பிறருடைய செயல் முறைகளில் பொறுப்பை கவனித்து, பொறுப் புடன் நடந்து கொள்ள வேண்டியவனுக இருக்கிறுன்.

ஒருவன் சமூகத்துக்கும் உலகத்துக்கும் தீமையான காரியம் செய்கையில், அதை பொறுப்புள்ளவன் பார்த்துக் கொண்டு சும்மா இருக்கக் கூடாது. பிறர்களுடைய தீங்கான காரியங்களைப் பார்த்தும் திருப்தி யடைந்து கொண்டிருப்பவன் தீமையானவனே. அந்தத் தீய காரியங்களால் நேரிடும் அனர்த்தங்களி லிருந்தும்-நாசங்களி னின்றும் இவன் எப்படி தப்பித்து வாழ முடியும்?

ஒரே ஊரில், ஒரே குடும்பத்தில், ஒரே வீட்டில் வசிப்பவர்கட்கு பொறுப்புக்கள் அதிக முண்டு. ஒவ்வொரு குடும்பஸ்தனும் பிற னுடைய நன்மை தீமைகளில் சிறத்தை கொள்ள வேண்டியவனுக யிருக்கிறுன். குடும்பத்தில் சேர்ந்து வாழும் பலரில் ஒருவன் முட்டா ளாக இருக்கலாம்; அல்லது விஷமச் செயல் புரியும் துஷ்டனுக இருக்க

லாம்; வீட்டைக் கொளுத்தி வேடிக்கைப் பார்க்கும் விபரீதப் பேயனாகவும் இருக்கலாம். இப்படிப்பட்டவர்களுடன் சேர்ந்து வாழும் அறிஞனாகிய விவேகி, மகத்தான பொறுப்பு உடையவனாக இருக்க வேண்டும். பிறர் செய்யும் நலவான-தீதான காரியங்களை சதா கண்ணோட்டம் புரிந்து கொண்டிருக்க வேண்டும். குடும்பத்துக்கு எவன் நன்மை செய்கிறான், எவன் தீமை செய்கிறான் என்பதை ஆராய்ந்து பார்த்துக் கொண்டிருக்க வேண்டும்.

எனவே, பிறர் புரியும் தீங்கில் நல்லவருக்கும் பங்குண்டு. பலர் வசிக்கும் வீட்டில் ஒருவன் தீ மூட்டி விடுவானானால், அதில் நல்லவர்களும் வெந்து மடியவேண்டியது வரும். நல்லவிதமாய் நீர்மேல் மிதந்து செல்லும் நல்ல படகை ஒரு விஷமி ஓட்டைசெய்துத் துளைத்து மூழ்கடிப்பானானால், அதைப் பார்த்துக் கொண்டு சும்மா இருந்தால் இதர பிரயாணிகளும் மூழ்கி மடிய வேண்டி ஏற்படும்.

## ஹதீது போதிக்கும் அரிய உதாரணம்

"ஜாமிஉ திர்மதீ" என்ற பிரபல ஹதீதுக் கிரந்தத்தில் அரியதோர் ஹதீது காணப்படுகிறது. சமூகத்துக்குத் தீங்கு செய்யும் விஷமிகளைப் பற்றியும், விஷமிகளின் தீய செயலைப் பார்த்துக் கொண்டு சும்மா இருக்கும் பேதைகளைப் பற்றியும் அதில் அற்புதமான உதாரணம் (கதை) கூறப்பட்டிருக்கிறது. அதாவது:—

"நுஃமான் பின்பஷீர் (ரலி) ரிவாயத்து செய்கிறார்கள்: (நபிகள் நாயகம்) ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள்:– ஆண்டவனுடைய கட்டளைகளை மீறாமல் பேணி நடந்து கொள்வோருக்கும், அந்தக் கட்டளைகளை மீறி நடந்துக் கொள்வோரின் நடத்தைகளைக் கண்டு (விலக்காமல்) இருந்து விடுபவர்களுக்கும், பொருத்தமான உதாரணம் (பின்னால் கூறப்படும்) ஒரு கூட்டத்தாரின் நடத்தைகளுக்கு ஒப்பாகயிருக்கிறது. அந்தக் கூட்டத்தார் சமுத்திரத்தில் (இரண்டு தளமுள்ள) கப்பலில் பிரயாணம் செய்து கொண்டிருந்தார்கள். சீட்டுப் போட்டு, ஒரு சாரார் மேல் தளத்தை பற்றிக் கொண்டனர்; இன்னொரு சாரார் கீழ் தளத்தில் தங்கினார்கள். ஆனால் இரு சாரார்க்கும் மன ஒற்றுமை யில்லை. எனவே, கீழ் தளத்தில் இருக்க வேண்டி வந்தவர்கள், கடல் தண்ணீர் கொண்டு போவதற்காக அடிக்கடி மேல் தளத்துக்கு வந்து போய்க் கொண்டிருந்தார்கள். (மேலே இருப்பவர்களைத் துன்புறுத்துவதற்காக) அவர்கள் மீது தண்ணீரைச் சிந்திவிட்டுப்போவார்கள். இதனால் அதிருப்தி யடைந்த மேல் தளக்காரர்கள், "இனிமேல் நீங்கள் மேலே வரக்கூடாது; நீங்கள் வந்து தொந்தரவு செய்கிறீர்கள்" என்று தடுத்து விட்டார்கள். அதற்குப் பதிலாக, கீழ் தளக்காரர்கள், "அப்படி

நீங்கள் எங்களை மேல் தளத்துக்கு வர அனுமதி மறுப்பீர்களானால், நாங்கள் கீழ் தளத்திலேயே இருந்துகொண்டு, கப்பலுக்கு அடியில் துளை போட்டு ஓட்டை செய்து, அதிலிருந்து கடல் தண்ணீர் எடுத்துக் கொள்கிறோம்'' என்று சொல்லிச் சென்றார்கள்...........அப்படிப் பட்ட சமயத்தில், மேல் தளக்காரர்கள் தங்கள் கடமையை உணர்ந்து, (வரப்போகும் ஆபத்தை பகுத்தறிவால் அறிந்து), கீழே துளைத்து ஓட்டை பண்ணப் போனவர்களின் கைகளைப் பிடித்துக் கொண்டு, பணிந்து, அவர்கள் கப்பலை ஓட்டை செய்யாமற்படி பாதுகாத்துக் கொள்ளவேண்டும். அப்படி செய்யாமல் (பார்த்துக் கொண்டு) சும்மா இருந்து விடுவார்களானால், கப்பல் முழுதும் தண்ணீர் ஏறி அவர்களோடு இவர்களும் மூழ்கிப்போக வேண்டியதுதான்.'' (ஹதீது)

## யாருக்கு பொறுப்பு அதிகம்?

நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களுடைய உயரிய உதாரணத்தில், எத்துணைப் பெரிய தத்துவம் அமைந்திருக்கிறது, ஓர்ந்துப் பாருங்கள். படகின் மேல் தளத்தில் இருப்பவர்கள், கீழ் தளத்தில் இருந்து கொண்டு, படகைத் துளைத்து கெடுக்கப் போகும் முட்டாள் தனமான காரியத்தைத் தடுத்து நிறுத்த கடமைப் பட்டுள்ளார்கள். மேல் தளத்தில் உள்ளோர், சுயமே கப்பலுக் கொன்றும் தீங்கு செய்யாமற் போயினும், கீழ் தளத்தார் செய்யும் தீங்கினால் நேரிடக்கூடிய ஆபத்துகளுக்கு அவர்களும் இலக்காகியே தீரவேண்டும்.

கப்பலில் இரண்டுவித மனப்போக்குள்ள இருவிதக் கூட்டத்தாரும் தான் பிரயாணம் செய்கிறார்கள். ஒருவர் காரியத்தில் இன்னொருவருக்கு நெருங்கிய பங்கும் சம்பந்தமும் உண்டு. கீழ் தளத்தார் கடலுள் மூழ்கினால், மேல் தளத்தாரும் சேர்ந்துதான் மூழ்கவேண்டி ஏற்படும்.

சமூக, மதாசார விஷயங்களும் இப்படிப் பட்டதுதான். சமூகம் என்பது ஒரு கப்பலுக்கு ஒப்பானதாகும். அதில் பிரயாணம் செய்பவர்கள் ஒவ்வொருவரும் தத்தம் பொறுப்பை உணர்ந்து நடந்து கொள்ள வேண்டும். ஒருவன், ஆசார விஷயத்தில் தவறு செய்வானானால் மற்றவன், தன் சக்தியானுசாரம் அவனைத்தடுத்து ஆட்கொள்ள வேண்டும்.

“நன்மையைக் கொண்டு ஏவி, தீமையை விட்டும் விலக்கக் கூடிய ஒரு கூட்டத்தார், உங்களில் அவசியம் இருக்க வேண்டும்” என்றுள்ள திருக் குர்ஆன் கட்டளையையும் ஓர்ந்துப் பார்ப்பீர்களாக. எனவே, முஸ்லிம்களாகிய நாம், நமது சமுதாய வாழ்க்கைப் படகு எக்காரணத்தை முன்னிட்டும் கவிழ்ந்து போகாமலிருக்க, பாதுகாத்துக் கொள்வோமாக! வஸ்ஸலாம்.

# பிள்ளைகள் பொய் பேசும் வழக்கம்

டி. எப். ஆர். மஆலி சாஹிப் (பாகவி)

குழந்தைகளின் உள்ளம் களங்கமில்லாதது; எதை ஒளிக்க வேண்டும்; எதை ஒளிக்கக் கூடாதென்பது குழந்தைகளுக்குத் தெரியாது. கண்ணுடியின் முன் எந்த உருவம் வந்தாலும் கண்ணுடி அதைப் பிரதிப்பலிப்பதுபோல். குழந்தைகள், தங்களுக்குத் தெரிந்த விஷயத்தை ஒளிக்காமல், மறைக்காமல் வெளிப்படுத்தி விடுவார்கள். எனவே குழந்தைகள் பரிசுத்தமானவர்கள்; தெய்விகத் தன்மை உடையவர்கள்.

பத்து வயதுக்கு உட்பட்ட பிள்ளைகளெல்லாம் குழந்தைகளே; பெரிய குழந்தை—சிறிய குழந்தை என்று சொல்லலாமே யல்லாது, பெரிய குழந்தைகளைப் பொல்லாதவர்கள் என்று சொல்லக்கூடாது.

## பொய் பேசும் பிள்ளை.

சிறு பிள்ளைகள், இயற்கையாகவே பொய் பேசத் தொடங்குவதேயில்லை. இதை ஆராய்ந்து பார்க்கும் ஒவ்வொருவரும் எளிதில் அறிந்து கொள்ளலாம்.

பிள்ளைகளில் சிலர் பொய் பேசலாம், உண்மையை மறைக்கலாம். ஆனுல் அந்தப் பழக்கம் எப்படி உண்டாகிறது? பொய் பேசத் துணியும் எல்லாப் பிள்ளைகளும், பெரியோர்களைப் பார்த்தே அங்ஙனம் உள்ளதை மறைத்து இல்லாததைச் சொல்ல, அதாவது பொய் பேச கற்றுக் கொள்கின்றனர்.

பெற்ளுேர்களும் உற்ளுர்களும் சில சமயங்களில், நிகழ்ந்த உண்மையை மறைத்து விஷயத்தை வேறு விதமாய் திரித்து மாற்றிப் பேசுகிருர்கள். உண்மை நிகழ்ச்சிகளை குழந்தைகள் கூடத்தான் பார்த்துக் கொண்டிருந்தன. அங்ஙனமிருந்தும், பெரியோர், நடந்ததை நடக்காததாகப் பேசுகிருர்களே! என்று குழந்தைகள் முதன் முதலில் ஆச்சரியப் படுவார்கள். அப்புறம் அந்த அச்சமும் போய் விடும். தாங்களும் சுயமே அப்படி உண்மையை மறைத்துப் பேச பழகிக் கொள்வார்கள்.

தந்தை வீட்டில் ஏதோ வேலை செய்து கொண்டிருக்கிருர். வெளியில் யாரோ வந்து கூப்பிடுகிருர்கள். வந்திருப்பவர் யார் என்பதை தகப்பனுர் தன் பிள்ளையிடமே கேட்டுத் தெரிந்து கொள்கிருர். வந்திருப்பவர் கடன்காரப் பேர்வழி, அல்லது தனக்கு வேண்டாதவர் என்பதை அறியும் தகப்பனுர், பிள்ளையை அழைத்து, "கண்ணே!

அந்த மாமாவிடம் போய், அப்பா வீட்டில் இல்லை என்று சொல்லி விடு" என்று கற்பித்து அனுப்புகிறார்.

'சொன்னதைச் சொல்லுமாம் கிளிப்பிள்ளை' என்ற பழமொழிப் படி, அந்தக் குழந்தை வெளியே போய், "அப்பா வீட்டில் இல்லை ஆபீஸுக்குப் போய் விட்டார்" என்று ஒரு வார்த்தையை அதிகம் சேர்த்தே சொல்லி விடுகின்றது.

முதன் முதல் பிள்ளைகள் இப்படித்தான் பொய் சொல்ல கற்றுக் கொள்வது சகஜம். சில பிள்ளைகளுக்கு பொய் சொல்லக் கற்றுக் கொடுத்தாலும், பழக்கத்திற்கு இலேசில் வருவதில்லை. 'அப்பா வீட்டில் இல்லை யென்று சொல்லிவிடு' என்று சொல்லி அனுப்பினால் அந்தக் குழந்தை வெளியேபோய், வந்திருப்பவரை நோக்கி, 'அப்பா வீட்டில் இல்லை யென்று உங்களிடம் சொல்லச் சொன்னார்' என்று ஸ்பஷ்டமாய் உண்மையை எடுத்தியம்பிவிடுவது சர்வ சாதாரண விஷயம்.

## அம்மா சொல்லும் பொய்.

பக்கத்து வீட்டுப் பெரியம்மா, நமது வீட்டுக்கு வருகிறாள். அந்த பெரியம்மா எப்போது வந்தாலும் ஏதாவது கேட்டு வாங்கிப் போகத்தான் வருவாள். இந்த முறையில் வந்த பெரியம்மா, "தங்கச்சி, கொஞ்சம் கத்தரிக்கோல் கொடு; எங்கள் வீட்டில் ஒரு பழைய துணியை கத்தரிக்க வேண்டும்" என்று கேட்கிறாள். அவளிடம் நமது புதுக் கத்தரிக்கோலை இரவலாகக் கொடுத்தால், உடைத்து விடுவாள்; அல்லது கெடுத்து விடுவாள் என்று வீட்டு அம்மாவுக்குப் பயம். ஆதலால் வந்தவளிடம் நாஜுக்காகவும் அன்பாகவும் பேசி, "வீட்டில் கத்தரிக்கோல் இல்லையம்மா, அடுத்த தெருவில் வசிக்கும் தங்கை வாங்கிக் கொண்டு போயிருக்கிறாள். இன்னும் கொண்டு வந்து கொடுக்க வில்லை" என்று ஒரு பொய்யை அழகாக கற்பனை செய்து சொல்லி அனுப்பி விடுகிறாள்.

இதை அவளது சின்ன பிள்ளை பார்த்துக் கொண்டும், கேட்டுக் கொண்டும் இருக்கிறான். கத்தரிக்கோல், வீட்டு மாடத்தில் அட்டைப் பெட்டியில் வைத்திருப்பது அவனுக்கு நன்றாய் தெரியும். அப்படி யிருக்க தாயார், "கத்தரிக்கோல் இல்லை; யாரோ வாங்கிக் கொண்டு போயிருக்கிறார்" என்று சொல்லி அனுப்பி விட்டதைக் கொண்டு, "ஓஹோ, நம்மிடமுள்ள பொருளை யாருக்காவது கொடுக்க இஷ்டம் இல்லாவிட்டால், இப்படி 'மாறு' சொல்லி அனுப்பிவிடலாம் போலிருக்கிறதே" என்று உணர்ந்து கொள்கிறான். இதுதான் குழந்தை பொய் சொல்லக் கற்றுக் கொள்ளும் முதல் பாடம்.

## பிள்ளையின் சுயமான பொய்.

பொய் சொல்ல பிள்ளைகள் பழக்கப்படுகிறார்களே யல்லாமல் பழகுவதில்லை. அதன்பின், அந்தப் பிள்ளை சின்னஞ் சிறு பொய்களை தானே சொல்லவும் தொடங்கிவிடுகிறான். "பள்ளிக்கூடம் போடா" என்று சொன்னால் "வயிற்றில் வலிக்கிறது, அம்மா!" என்று சொல்லித் தாயாரை ஏய்க்கிறான். முதன் முதல் தாயார் அதை நம்பி, பிள்ளைக்கு இனியஷர்பத்தோ, பழரசமோ கொடுத்து வயிற்று வலியைப் போக்க பிரயாசைப்படுகிறாள். குழந்தை, "இதென்னடா பொய் சொன்னால் ஷர்பத்து கிடைக்கிறதே" என்று மறுநாளும், பள்ளிக்கூட நேரத்தில் மட்டும் 'வயிற்றில் வலிக்கிறது' என்று சொல்கிறான். மற்ற நேரத்தில் வராத வயிற்றுவலி, பள்ளிக்கூட நேரத்தில் மட்டும் வருவானேன் என்று தாயார் நினைக்கிறாள். சரி, போகட்டும் என்று பிள்ளையை அன்றும் பள்ளிக்கூடத்துக்கு அனுப்ப நிர்ப்பந்திப்பதில்லை.

இரண்டாம் நாள் பொய் சொல்லத் துணிந்த அந்தப் பிள்ளைக்கு, பள்ளிக்கூடம் போகாமல் இருந்துவிட்டதில் மட்டும் திருப்தியில்லை. "அம்மா! நேற்று வயிற்றில் வலிக்கிறது என்று சொன்னால், ஷர்பத் கொடுத்தாயே, இன்று ஏன் அம்மா கொடுக்கவில்லை?" என்று சாமர்த்தியமாய் கேட்கிறான். தாயாருக்கு விஷயம் விளங்கி விடுகிறது. "ஓஹோ, ஷர்பத்துக்காக நீ பொய் சொல்கிறாயா? போடா பள்ளிக்கூடம்" என்று முதுகில் இரண்டு அடிபோட்டு, பள்ளிக்கூடத்துக்கு அனுப்பி விடுகிறாள்.

## கெட்ட பேச்சுகள் பழக்கம்.

வீட்டில் குடியிருக்கும் இரண்டு ஸ்திரிகள் சண்டை போட்டுக் கொள்கிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். அவர்கள் லஜ்ஜைஇல்லாமல், ஒருவரை ஒருவர் வைது தூஷித்துக் கொள்ளும் கெட்ட வார்த்தைகளை குழந்தைகள் காது கொடுத்துக் கேட்கவேண்டி வருகிறது.

அதுமட்டுமல்ல; தெருவில் பெரிய பையன்கள் துஷ்டத்தனமாய் சண்டை யிட்டுக்கொள்ளும் போது பேசும் மட்டரகமான பேச்சுகளையும் வசைமாரிகளையும், அருகில் விளையாடிக் கொண்டிருந்த நம் பையனும் கேட்க வேண்டி வருகிறது.

இப்படிப்பட்ட சம்பவங்களிலிருந்தும், சிறு பிள்ளைகள் பொய் சொல்லவும், கெட்ட வார்த்தை பேசவும், தூஷணை மொழிகளைச் சொல்லவும் எளிதில் கற்றுக் கொண்டு விடுகிறார்கள்.

இதற்காக நாம் குழந்தைகளை போட்டு அடிப்பதனால் பயன் உண்டா? பிறகு பிள்ளைகளை அந்தக் கெட்ட சொற்கள் பேசாமற்படி

எப்படி பாதுகாப்பது இது ஒரு பெரிய பிரச்னையல்ல! இனிமேல், நம் பிள்ளைகளை அப்படிப்பட்ட துஷ்ட ஜனங்களும், கெட்டபிள்ளை களும் பழகும் இடங்களில் விடாமல், நல்ல ஜனங்களுடையவும் நல்ல பையன்களுடைய சத் சகவாஸத்தில் விட்டு வைப்பதே நல்ல பரிகாரம்.

## மெய் சொல்ல வைப்பது எப்படி ?

வீட்டில் இரண்டு பிள்ளைகள் பந்து விளையாடிக் கொண்டிருந் தார்கள். எதிர்பாராமல் பந்து பறந்துப்போய், சுவரில் மாட்டியிருந்த விளக்குச் சிம்னியில் பட்டு சிம்னி உடைந்து போய்விட்டது. அப் போது தாயார், இரண்டு பிள்ளைகளின் கைகளைபற்றி இழுத்து, சிம்னி எப்படியடா உடைந்தது? என்று கேட்டாள். எனக்குத் தெரி யாது என்று ஒரு பையன் சொன்னான். இன்னொரு பையன் "பூனை உடைத்து விட்டது" என்று சொன்னான். இரண்டுபேரும் பொய் தான் சொன்னார்கள் என்பதை அறிந்த தாயார், இருவர்களின் முது கிலும் பளார், பளார் என்று அடித்துக் கொண்டிருந்தாள்.

அப்போது தகப்பனார் வெளியே யிருந்து வந்தார். என்ன வென்று விசாரித்தார். தாயார் ஆத்திரத்தோடு "இந்த இரண்டு சனி யன்களும் சேர்ந்து, விளக்கு சிம்னியை உடைத்து விட்டனர். கேட்டால் பொய்யும் சொல்லுகின்றனர்" என்று சொல்லி, மேலும் ஆளுக்கு இரண்டு அடி போட்டாள்.

தகப்பனார் உலக அனுபவம் உடையவர். குழந்தகளின் சுபா வத்தை நன்கறிந்தவர். குழந்தைகளை முரட்டுத்தனமாய் அடிப்ப தால், அவர்கள் திருந்திவிட மாட்டார்கள் என்பதை உணர்ந்தவர். குழந்தைகளை எப்படிப் பழக்கவேண்டும் என்பதையும் அறிவார்.

எனவே தாயாரிடமிருந்து இரண்டு பிள்ளைகளையும் விடுவித்து அழைத்துக் கொண்டு போய், தனி அறையில் வைத்துக்கொண்டு, அன்பாக இதமொழிகள் பேசி, "செல்வங்களே, இதோ இரண்டு மாம் பழங்கள். விளக்குச் சிம்னி எப்படி உடைந்து விட்டது என்பதை உண்மையாகச் சொல்லி விட்டால், உங்களுக்கு மாம்பழம் தருவேன்" என்று கேட்டார்.

உடனே ஒருபிள்ளை, "அப்பா! நாங்கள் பந்து விளையாடிக்கொண் டிருந்தோம். அண்ணன் பந்தை வேகமாக அடித்தான். அது பாய்ந்து விளக்கில் பட்டு சிம்னி உடைந்து விட்டது" என்று சொன்னான். அண்ணனும் அதை மறுக்காமல், தம்பி சொன்னதை ஆமோதித்தான். தகப்பனார் மிகவும் சந்தோஷப்பட்டு ஆளுக்கொரு மாம்பழம் கொடுத் தார்.

"குழந்தைகளே! இப்படியே எந்த சந்தர்ப்பத்திலும், உண்மையை மறைக்காமல், உள்ளதை உள்ளபடியே சொல்லி விட்டால், உங்களை யாரும் அடிக்க மாட்டார்கள். சந்தோஷப்பட்டு பரிசும் கொடுப்பார்கள்!" என்று உபதேசமும் செய்தார் தந்தை.

பிள்ளைகள் பொய் சொல்ல முதன்முதல் எப்படி கற்றுக் கொள்கிறார்கள் என்பதற்கு அநேக உதாரணங்களைச் சொல்லலாம். அநேக சந்தர்ப்பங்களில் நாமும் பார்த்திருப்போம். அதையெல்லாம் நாம் சிரத்தையுடன் கவனிப்பதும் சிந்தித்துணர்வதுமில்லை.

எனவே, பிள்ளைகளின் பராமரிப்பிலேயே அவர்களின் வருங்காலம் அமைந்திருக்கிறது. சகவாஸ தோஷத்தாலே, பிள்ளைகள் பொய் சொல்லவும் கெட்டுப்போகவும் தொடங்கி விடுகிறார்கள். ஆதலில், பிள்ளைகளை நல்ல சூழ்நிலையில் வைத்திருக்க வேண்டும். மிரட்டிப் பயமுறுத்தி அவர்களைத் திருத்தி விடமுடியாது. அன்பாகப் பேசி இதமான மொழியில் உபதேசம் செய்தால், அவர்கள் எளிதில் திருந்தி விடுவார்கள். இதெல்லாம் அநுபவத்தால் அறியும் விஷயங்களாகும்.

---


## மஜ்மூஉ மவ்லூது.

இதில் றஸூலுல்லாஹ்வுடைய மவுலூதும், அதன் துஆக்களும், அந்த மௌலூதின் வரிசைகளும், ஒவ்வொரு பைத்தின் தலைப்பில் அதற்குள்ள ஸலவாத்து பாட்டுகளும், அதபுகளும், இத்துடன் முஹ்யித்தின் ஆண்டவர்கள் மவுலூதும், அதன் துஆக்களும், அதன் வரிசைகளும், மீரான் ஸாஹிபு ஆண்டவர்கள் மவுலூதும், அதன் துஆக்களும், அதன் வரிசைகளும், யாஸெய்யதி, யாகுத்பா, யாஸெய்யதி ஷைகி, மழை பைத்து, பீஹுப்பி ஸையிதினா பைத்து முதலியவைகளும் தமிழால் சுத்தமாய் யெழுதி கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பட்டது. கலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது.

விலை அணா. 15

ஷை மூன்றுமௌலூதுகளும் அறபியில் கிளேஸ் காகிதம் கலிகோ பைண்டு. விலை ரூ. 1-8-0

---

கிடைக்குமிடம்:—

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

# மஜ்மூஅ முனாஜாத்.

(சுத்தத் தமிழ்)

(இரண்டாம் பதிப்பு)

இந்த புஸ்தகத்தில் ஹக்கு பேரில் முனாஜாத்து, யாஸை யிதி மாலை, யாகுத்பா மாலை, தலை பாத்திஹா, ஸலவாத்துப் பாட்டு, முத்து மணி மாலை, பக்தி ஆனந்த பாத்திமுத்து மாலை, முஹியித்தீன் முனாஜாத், காஜா பந்தே நவாஸ் முனாஜாத், சரசுவதி மாலை, காஸிம் புலவர் இன்னிசை, கலியாண வாழ்த்துப் பதங்கள் ஆகிய இவைகள் சேர்ந்திருக்கின்றன.

இதன் விலை அணா. 8

ஷை அறபுத் தமிழ் விலை ரூ. 1—4—0

# மஜ்மூஉல் ஸலவாத்து.

இப்புத்தகம் அல்லாஹு தஆலாவின் அஸ்மாவுல் ஹுஸ்னாவைப் பொதிந்த துஆகன்ஜுல் அர்ஷும், இன்னும் நபிகள் நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் பேரில் எப்போதும் நேமமாய் ஓதி வருகிற ஸலவாத்துகளில் மிகவும் புகழானதும், மற்றும் ஸலவாத்துகளுக் கெல்லாம் தாயானதுமான உம்மு ஸலவாத்தும், இன்னும் அல் குத்புர் றப்பானீ வல்கௌதுஸ் ஸமதானீ முஹ்யித்தீன் அப்துல் காதிரி ஜைலானி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் பேரில் ஓதப்படும் கவ்திய்யா ஸலவாத்தும், இன்னும் செய்தினா குதுபுல் அக்தாபு வகௌதுல் அஃபாபு ஜிந்தா ஷாஹ மதார் பதீவுத்தீன் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் பேரில் ஓதப்படும் மதாரிய்யா ஸலவாத்தும், இன்னும் அநேக சில்லரை ஸலவாத்துகளும், துஆக்களும் ஒருங்கே சேர்ந்த அருமையான கிதாப். சுத்தத் தமிழில் சிறியதாய் பாக்கெட் புத்தகம் போல் கிளேஸ் காகிதத்தில் அழகாய் அச்சிடப்பட்டு கலிகோ பைண்டு செய்யப் பட்டிருக்கிறது. விலை அணா. 15

ஷை அறபுத் தமிழ் விலை அணா. 15

---

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ்,

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

# இஸ்லாம் தரும் இனிய போதனை.

டி. எப். ஆர். மஆலி ஸாஹிப் (பாகவி)

(2-ம் பகுதி)

## 70 கோடி உண்மை முஸ்லிம்கள்

தீனுல் இஸ்லாத்தின் உம்மத்துகளாகிய 70கோடி முஸ்லிம்கள், இத்தரணி யெங்கும் பரவி வசிக்கிறார்கள். இன்னோர் அனைவரும் இஸ்லாத்தின் அபிமானிகள்; அல்லாஹ்வின் பக்தர்கள்; முஹம்மத் நபி எனும் தீண்டா மணிச்சுடர் விளக்கைச் சூழ்ந்து பறந்து உயிர்த்தியாகம் செய்யும் 'பர்வானா' என்னும் விட்டிற் பூச்சிகள்.

லோகத்தில் 70 கோடிக்கு மேல் முஸ்லிம்கள் வசிக்கிறார்களென்பது வாஸ்தவம். ஆனால் எல்லா முஸ்லிம்களும், இஸ்லாமிய ஷரீஅத்தின் எல்லாக் கடமைகளையும் ஏற்று அனுஷ்டிப்பவர்களாய், ஆமில்களா யிருக்கிறார்களா எனின், அது வேறு விஷயம். ஆயினும், அல்லாஹ்வைக் கொண்டும் அவனது திருத்தூதர் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களைக் கொண்டும் ஒரு முறை மனப்பூர்வமாய் ஈமான் கொண்ட முஸ்லிம்கள். அனுஷ்டான விஷயத்தில் அதிருப்திகரமா யிருந்தாலும், உறுதியான தம் ஈமானை, எத்துணை கஷ்ட நஷ்டங்கள் வந்துற்ற போதிலும் சிறிதும் மனம் தளர விடாத வலிமை சாலிகளாக இருக்கிறார்கள். நடை உடை பாவனையில் உலக முஸ்லிம்கள் வெவ்வேறு விதமாய் காணப்பட்ட போதிலும், சன்மார்க்க ஷரீஅத்தின் மீது விசுவாசங் கொண்டு அதனை நிலை நிறுத்தவும் பாதுகாக்கவும் ஒரு சிறிதும் பின்னடைய மாட்டார்களென்பது திண்ணமேயாகும். உதாரணமாக, கல்வியறிவே யில்லாத ஒரு சாதாரண முஸ்லிமைப் பார்த்து யாரேனும் "அடே, உனக்கு ஆயிரம் ரூபாய் தருகிறேன்; நீ உன் ஈமானைத் தளர விட்டு இஸ்லாத்திற்கு விரோதமாய் இரு" என்று சொல்லிப் பார்க்கட்டும். அந்தப் பேதை முஸ்லிம் என்ன பதில் சொல்கிறான் என்று பாருங்கள். அந்த ஆயிரம் ரூபாய் கொடுத்து ஈமானை விலைக்கு வாங்க வந்தவனை ஒரே குத்து விட்டுத் தரையில் வீழ்த்துவான்; அல்லது அத்துஷ்டனின் சகவாசத்தை விட்டு காததூரம் விரண்டோடுவான் என்பது நிச்சயம். இதுதான் ஈமான் உள்ள முஸ்லிம்களின் அடையாளம்.

முஸ்லிம்கள் எனப்படுவோர், நித்யகர்ம அனுஷ்டான விஷயத்தில் உறுதியில்லாதவர்களா யிருந்தாலும், ஏக இறைவனாகிய அல்லாஹ்வைத் தவிர வேறொன்றையும் வணங்கக்கூடா தென்பதிலும், முஹம்மது

நபியின் ஷரீஅத்தைக் காப்பாற்ற தம் உடல், பொருள், உயிரைத் தியாகம் செய்ய வேண்டு மென்பதிலும் ஒரு சிறிதும் பின் வாங்க மாட்டார்கள். எனவே, ஒவ்வொரு முஸ்லிமும் தீனுல் இஸ்லாத்தை ஏற்பதோடு மட்டுமல்லாமல், அதை அல்லும் பகலும் சதா பாதுகாக்கும் போர் வீரனாக விளங்குகிறான் என்பதில் சந்தேகமில்லை. முஸ்லிம்கள் இஸ்லாத்தின் மீது உறுதி கொண்ட பின்னர், எத்தகைய மண் பொன் பெண்ணாசையும் அவனை அல்லாஹ்-ரஸூலின் பக்தியை விட்டும் பிறழச் செய்துவிட முடியாதென்பது திண்ணம்.

எனவே, முஸ்லிம் எனப்படுபவன் உலக விஷயமான ஒழுக்கங்களில் தவறு இழைக்கலாம். பண சம்பாத்தியத் துறையில் வரம்பைக் கடக்கலாம். உலோபித்தனம் புரியலாம். ஆனால், இஸ்லாமிய அடிப்படைக் கொள்கைகளில் அவன் உறுதி இழக்க மாட்டான். அயல் மதவாதிகளின் மிரட்டலுக்கு அவன் பணிய மாட்டான். பிற மதத்தினரால் இஸ்லாத்திற்கு செய்யும் விஷமத்தனங்களை பார்த்துக் கொண்டு சும்மா இருக்க மாட்டான். இஸ்லாத்திற்கு இடையூறு நேருங் காலத்தில், அதைக் களைந்தெறிந்து இஸ்லாமிய ஷரீஅத்தைக் காப்பாற்ற முனைந்து நிற்பான். இப்படிப்பட்ட பிரத்தியக்ஷமான உதாரணத்தை பிறமத மக்களினிடையே காண முடியாது. சத்தியத்துக்காக சகலத்தையும் தியாகம் செய்யும் அபூர்வ தன்மையை முஸ்லிம்களிடம் காணலாம். முஸ்லிம்-முஸ்லிமாய் விளங்குகிறான் என்பதற்கு இதுதான் அடையாளம். இஸ்லாத்தை முஸ்லிம்கள் மூலம் ஆண்டவன் இனிது காப்பாற்றுகிறான்.

## இஸ்லாத்தில் மாறுதல் இல்லை.

இப்பிரபஞ்சம் உற்பத்தியான காலந்தொட்டு, எத்தனையோ மதங்கள் தோன்றின; எத்தனையோ தர்மங்கள் ஸ்தாபிதமாயின. அவற்றின் வேதங்கள் எத்தனையோ உதயமாயின. சாஸ்திரங்கள் எத்தனையோ இயற்றப் பட்டன. ஆயினும் என்னவாயின அவை யெல்லாம்? எண்ணற்றன மறைந்தொழிந்து போயின. கணக்கற்றன சிதைந்து விட்டன. அவற்றில் பலப்பல மதங்களும், அவற்றின் வேதங்களும் மாறுதலடைந்து பேதமுற்று உருக்குலைந்து போயின. இது பொதுப்படையான விஷயம்.

குறிப்பாக, சிற்சில மதங்கள் இக்காலத்தில் வியாபித்துப் பரவியே இருக்கின்றன. இருந்து மென்ன? அவற்றின் வேதங்கள் மாற்றப்பட்டு போயின. தர்ம இலக்ஷியங்கள் சிதைந்து போயின. மூலக் கொள்கைகளென்னும் வேர்கள் செல்லரித்து விட்டன. அவற்றின் ஆதி போதனைகள் இக்காலை மிக மாறிப்போய் விபரீதத் தோற்றத்தை யடைந்துள்ளன.

ஆனால், பரிசுத்த நீனுல் இஸ்லாத்தின் பூர்வீகத்தையும், இக்கால நிலையையும் சற்றே சீர்தூக்கிப் பாருங்கள். "அன்று கண்டமேனிக்கு இன்றளவும் பழுதில்லை" என்பதைப்போல், இஸ்லாம் மதம் ஆரம்பமான காலந்தொட்டு இன்று வரை, ஒரு சிறிதும் சிதைவுறாமலும், மாற்றப்படாமலும் இருந்துவருகிறது. இஸ்லாம் மதமானது, நபிகள் பெருமானார் முஹம்மத் (ஸல்) அவர்களால், அல்லாஹ் தஆலாவின் கட்டளைப்படி, லோக மன்பதைகட்கு போதிக்கப்பட்டு இன்று 14 நூறு ஆண்டுகளுக்கு மேலாகின்றது. ஆயினும் அன்றுபோலவே இன்றும், எழில் குன்றாது இருந்து வருகின்றது. இஸ்லாத்தின் வேதமாகிய திருக்குர்ஆனே அதற்கோர் பிரத்தியக்ஷ உதாரணம். ஆண்டவனுடைய அருள்வாக்கு சேகரமாகிய குர்ஆன் ஷரீபின் ஒரு அத்தியாயமேனும் அட்சரமேனும் மாறுதல் அடையாமல் இருந்து வருகின்றது. ஒரு ஜபர், ஒரு நுக்தாவைக் கூட மாற்றுவதற்கு யாருக்கும் தைரியம் ஏற்படாதவண்ணம் பாதுகாக்கப்பட்டு வருகிறது. கற்பாறை மீது அடிப்படையிடப்பட்டு எழுந்த கட்டிடம்போல, கொஞ்சமும் அசைந்து கொடுக்காமல் உறுதியாய் இருந்து வருகின்றது.

அல்லாஹ்வுடைய சன்மார்க்கத்திற்கு ஒருபோதும் மாறுதல் கிடையாது. வானம், பூமி, சூரியன், சந்திரன், மழை, மேகம் இவைகளில் இயங்குதல்களில் எங்ஙனம் ஒழுங்குபேதம் கிடையாதோ அதே மாதிரியே, இஸ்லாத்தின் அடிப்படைப் பாங்கில் எவ்வித மாறுதலும் கிடையாது. மாற்ற வேண்டிய அவசியமும் ஏற்படாது.

இஸ்லாத்தை ஏற்று நடப்பவர்களான முஸ்லிம்களுடைய நித்திய கர்மானுஷ்டானங்களில் ஊக்கம் குறையலாம்; மாறுதல் ஏற்படலாம்; விகல்பம் காணலாம். "தீனெ பித்ரத்" அல்லது இயற்கை மதம் என்னும் இஸ்லாத்தின் அடிப்படைத் தோற்றங்களில் மாறுதல்களுக்கே இடம்பாடில்லை. ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக, இஸ்லாத்துடைய வேதத்திலோ, தொழுகையிலோ, பாங்கு ஓதலிலோ, நியாயானுஷ்டானங்களிலோ எத்தகைய மாறுதலும் கிடையாததே இஸ்லாம் சத்திய மதம், இயற்கைக்கும் செயற்கைக்கும் ஒத்தமதம் என்பதற்கு ஒரு பகிரங்க அத்தாக்ஷியாகும்.

## காலத்துக் கேற்ற தர்மம் இஸ்லாம்.

இஸ்லாம் தெய்வீக மதமாக இல்லாது போயிருந்தால் அதில் கால தேச வர்த்தமானங்களால் பலப்பல மாறுபாடுகள் ஏற்பட்டுப் போயிருக்கும். சென்ற 500 வருஷங்களாக, லோக வாழ்வில் மக்களுடைய கர்மானுஷ்டானங்களிலும், இயந்திர சாதனங்களிலும், உண்ணல் குடித்தல்களிலும், இருத்தல் உறங்கல்களிலும், கொடுத்தல் வாங்கல் என்னும் வர்த்தகத் துறையிலும் எத்தனையோ முன்னேற்றமும் நாகரிகமும் மாறுதலும் ஏற்பட்டுப்போயிருக்கின்றன. அதற்கேற்ப காலதேச

வர்த்தமானங்கள் மாற்றம் அடைந்துகொண்டு வருகின்றன. ஒட்டகத்தின் மேலேறி கார்வான்களாய், மெதுவாய் மாதம் காததூரம் வரை யாத்திரை போய்க் கொண்டிருந்தவர்கள், இப்போது, ஏரோப்ளேன் என்னும் ஆகாய விமானத்தின் மூலம் ஒரு மாத யாத்திரையை ஒரு மணிநேரத்தில் முடிக்கிறார்கள். இதே மாதிரிதான் மனித வாழ்க்கை ஒவ்வொரு துறையிலும் நாகரிகமும் முன்னேற்றமும் அடைந்து விகசிதமாய் விளங்குகின்றது.

இப்படிப்பட்ட நாகரிக சாதனங்கள் உலகத்தோற்றத்தையும், மனிதர் வாழ்வுப் போக்கையும் வெகு தூரம் மாற்றிவைத்து விட்டன. ஆனால் இஸ்லாம் மதத்தை மட்டும் அவை எவ்விதத்திலும் பாதித்து விடவில்லை. அதாவது, பரிசுத்த தீனுல் இஸ்லாத்தின் போதனைகள், எந்த காலத்திற்கும் எந்த தேசத்திற்கும் எந்த பாஷைக்கும் ஏற்றதாக இயற்கைப் பிரகாரம் அமைந்திருப்பதால், இஸ்லாம் மதமானது ஒட்டகத்தின் மீது யாத்திரை செய்பவர்களின் வாழ்க்கைக்கும், ஆகாய விமானத்தில் பாய்ந்துப் பறக்கும் பேர்வழிகட்கும் ஏற்றமதமாய் இசைந்த தருமமாய் அமைந்திருக்கிறது. அப்படி இஸ்லாம் மதம் எல்லா சந்தர்ப்பத்துக்கும் நாகரிகத்துக்கும் ஏற்றதாய் இல்லாது போயிருக்குமாயின், எத்தனை பழைய மதங்கள் லோக மக்களால் கைவிடப்பட்டு மறக்கப்பட்டு போனதேபோல் இஸ்லாம் மதமும் மறைந்தொழிந்து போயிருக்கும். ஆனால் இஸ்லாம் மதத்தின் இயற்கை சக்தியானது எக்காலத்துக்கும் வளைந்து கொடுக்கக் கூடியதாய் இருப்பதால், இந்த சன்மார்க்கமானது எல்லா தேசத்தாராலும் எல்லா காலத்தாராலும் எல்லா நாகரிகக் காரர்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டும் அனுஷ்டிக்கப்பட்டும் வருகிறது.

“இஸ்லாத்தின் இயற்கை அமைப்பிலே, ஆண்டவன், ஓர் அரிய நளின சக்தியை அளித்துள்ளான். எனவே, எதிரிகள் அதை ஆழ்த்தி விட எத்துணைக்கெத்துணை அழுத்துகிறார்களோ, அத்துணைக்கத்துணை அது உயரக் கிளம்பி தலையோங்கி நிற்கிறது.” (உர்து கவி)

உர்தூ கவியின் கருத்துக்கேற்ப இஸ்லாம், யாவற்றிற்கும் வளைந்து கொடுக்கும் தன்மை படைத்ததாய் இருந்து வருகிறது. ஆதலால் தான் இஸ்லாம் மதத்தை இக்காலை ஐரோப்பியரும், அமெரிக்கரும், சீனரும், ஜப்பானியரும், ரஷ்யரும், ஆப்ரிக்கரும் மற்றெல்லோரும் தத்தமக்கேற்ற சன்மார்க்கமாய் ஏற்றுக் கொண்டு, இனிது அனுஷ்டித்து வருகின்றார்கள். இஸ்லாம் உலக மெங்கும் நிலைத்து ஓங்கி வளர்ந்து வருகின்றது.

## இஸ்லாம் உலகத்துக்கொரு ‘ரஹ்மத்’

உலகத்துக்கு இஸ்லாம் மதம் ஓர் பொதுப்படையான பேருளாக அருளப்பட்டிருக்கிறது. இஸ்லாத்தின் சத்தியம், இஸ்லாமிய தத்து

வம், இஸ்லாமிய விசுவசக்தி-இவைகளை அயல் மதவாதிகளும் ஆராய்ச்சி செய்து ஏற்றுக் கொண்டு பயனடைந்து வருகிறார்கள். இஸ்லாம் மதமானது முஸ்லிம்களுடைய வாழ்க்கையை மட்டுமல்ல, உலகத்து மக்கள் எல்லோருடைய வாழ்க்கைகளையும் சீர்திருத்தி, உந்தப்படுத்தி, பரிபக்குவ மடையச் செய்து கொண்டுவருகிறது.

இஸ்லாமியச் சூரியன் உதயமாவதற்கு முன், உலகத்தின் நிலைமை எப்படி யிருந்தது, இப்போது எப்படி இருக்கிறது என்பதை சற்றே சீர்தூக்கிப் பாருங்கள். வாழ்க்கை முறையிலும் ஆன்மத் துறையிலும், லோக மக்கள் இஸ்லாமிய போதனைகளி லிருந்து அபரிமிதமான பிரயோஜனம் அடைந்துள்ளார்கள். இஸ்லாம் மதத்தை தங்களுடைய மதத்துக்கு 'சத்துரு' என்று நினைத்துக் கொண்டிருக்கும் இஸ்லாமிய விரோதிகள் கூட, மறைமுகமான வழிகளில் இஸ்லாமிய போதனைகளி லிருந்து அனுஷ்டான அனுகூலம் அடைந்து வருகிறார்கள்.

இஸ்லாம் மதம் உதயமாவதற்கு முன், பிறதேசத்தார் அரசியல், சமுதாயம், ஆன்மார்த்தத் துறைகளி லெல்லாம் வீழ்ச்சியுற்றுப் படுபாதாளத்தில் கிடந்தார்கள். அவர்களுடைய தற்போதிய நிலைமையை கவனித்துப் பாருங்கள். பற்பல துறைகளிலும் அன்னோர் முன்னேற்றமடைந்துள்ளார்கள். இதற்கெல்லாம் அவர்களுக்கு, இஸ்லாமிய போதனையே துணையாக யிருந்து வந்துள்ளது.

ஓரே வார்த்தையில் கூற வேண்டுமானால், இஸ்லாம் மதம் லோக மக்க ளெல்லோருக்கும் பொதுவான ரஹ்மத் என்னும் பேரருளாக நிலவி யிருந்து வருகின்றது என்னலாம்.

"ஏ நபியே, நாம் உங்களை லோகத்தார்களுக் கெல்லாம் பேரருளாக (ரஹ்மத்தாக)வே அனுப்பி வைத்தோம்" என்பது திருக்குர்ஆன் வாக்கியம். இங்கு நபிகள் பெருமானார் முஹம்மத் (ஸல்) அவர்கள் 'ரஹ்மத்' என்ற பெயரால் அழைக்கப்பட்டிருக்கிறார்கள். நபி பெருமானார் (ஸல்) அவர்கள் மூலமாகவே, இஸ்லாத்தை லோக மக்கள் அறிந்து கொண்டதால், முஹம்மத் நபியே இஸ்லாத்தின் உருத் தோற்றமாய் விளங்குகிறார்கள். இதற்கு இஸ்லாமே ரஹ்மத், முஹம்மது நபியே ரஹ்மத் என்றும் பொருள் கொள்ளலாம்.

எனவே, இஸ்லாம் மதம் லோக மக்க ளெல்லோருக்கும் பொதுப் படையான ஓர் ரஹ்மத்தாக-பாக்கியமாக அருளப்பட்டிருக்கிற தென்பதை அறிவோமாக.

---

# ஸுல்தான் சிக்கந்தர் (அலை)

## கிஸ்ஸா.

ஸுல்தான் சிக்கந்தர் ஜுல்கர்னைன் (அலை) அவர்கள் ஒரு நபியாக இருந்து உலகத்துக்கும், உலக மக்களுக்கும் பல நல்ல காரியங்கள் செய்திருக்கிறார்கள். ஸுல்தான் சிக்கந்தர் ஜுல் கர்னைன் உடைய அரசாட்சி உலகத்தில் சிறந்த அரசாக்ஷியாய் இருந்தது. "ஜுல்கர்னைன்" என்றால் இரண்டு கொம்புகளை யுடையவர் என்று அர்த்தம். இதன் விபரமெல்லாம் இந்த நூலில் விரிவாய் சொல்லப் பட்டிருக்கிறது.

இத்துடன் நம்ரூது மன்னருடைய கிஸ்ஸாவும், நபி லூத் அலைஹிஸ்ஸலாமுடைய கிஸ்ஸாவும் சேர்த்து எழுதப் பட்டிருக்கிறது. எல்லோரும் படித்து அறிய வேண்டிய பிரயோஜனமான புஸ்தகம் இது.

சுத்தத் தமிழ் விலை அணா 8

புதிய பதிப்பு! [ஹதீதுகள்] புதிய பதிப்பு!!

# நபிநாயகத்தின் திருவாக்கியம்

## மிஷ்காத்தே ஷரீபின் மொழி பெயர்ப்பு.

## (முதற் பாகம்)

இதில் நமது நாயகம் முஹம்மது முஸ்தபா றஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருவாய் மலர்ந் தருளிய ஹதீதுகள் அடங்கி இருக்கின்றன.

முதற் பாகம் 930 ஹதீதுகள் உடையதாய் இருக்கிறது. 8-அங்குலம் நீளம், 5½-அங்குலம் அகலமுள்ள புஸ்தகத்தில் 288-பக்கங்களை கொண்டது கலிகோ பைண்டு செய்யப் பட்டுள்ளது.

இதன் விலை ரூ. 2—4—0

---

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,
நெ. 20, ஹை ரோட், திருவல்லிக்கேணி, மதராஸ், 5.

# காஜா நிஜாமுத்தீன் ஔலியா அவர்களின் ஜீவிய சரித்திரம்.

(அய்யம்பேட்டை, S. அப்துல் ரஜாக் ஸாஹிப்)

## (2-வது பகுதி)

அதற்கு ஷய்க் ருக்னுத்தீன் எத்தகைய பதிலளிக்கிறார்கள் என்றால்:—“மௌலானுவே! என் சகோதரரான நிஜாமுத்தீனுக்கு வஜத் ஏற்பட்டு அவர் எழுந்திருந்ததும் ஏழாவது வானத்தில் அடி வைத்தார். நான் முதல் தடவையில் பெருங்கஷ்டத்துடன் அவர் கைச்சட்டையை இழுத்து அவரை உட்காரவைத்தேன்.

இரண்டாவது தடவை அவர் எழுந்திருந்த போது எனக்கு அவர் கைச்சட்டையும் எட்டாமற் போகவே அவர் சட்டையின் கீழ் ஓரங்களை இழுக்க நேர்ந்தது.

மூன்றாவது தடவை அவர் எழுந்திருந்தாராயினும் அப்போது அவர் எனக்குத் தென்படாததால் எங்கே போனார் என்பது தெரியவில்லை. ஆனது பற்றி நான் நபில் தொழுகையில் ஈடுபட்டு விட்டேன்” என்பதே.

ஹஸ்ரத் நிஜாமுத்தீன் ஔலியாவைப்பற்றி “ஸைருல் ஔலியா” என்ற கிதாபில் வரையப்பட்டிருப்பதாவது:—

ஒரு தடவை டில்லி நகரின் கொத்வாலாகிய மௌலானு ஸஹீருத்தீன் என்பவர் சுல்தானுல் மஷாயக் ஹஸ்ரத் நிஜாமுத்தீன் ஔலியா அவர்கள் சமுகத்தில் அவர்களைக் கண்டு கொள்ள வந்தார். அப்போது கொத்வால் அவர்களுக்கு சற்று தூரத்திலிருந்தே சாம்பிராணி எரியும் வாசனை அவர்களின் நாசிக்கு எட்டியது. ஹஸ்ரத் ஔலியா அவர்கள் வசிக்கும் அறையில் சாம்பிராணி புகை போட்டிருப்பதாக அவர் கருதலானார்.

கிட்டத்தில் வந்தவுடன் வேலைக்காரர் ஹஸ்ரத் ஔலியா அவர்களின் அறைக் கதவுகளை திறந்தார். ஆனால் அச்சமயம் அறைக்குள் சாம்பிராணி புகையோ அல்லது வாசனையோ இருக்கக் காணோம். அதனால் அவருக்கு பெரும் ஆச்சரியம் ஏற்பட்டது.

சுல்தானுல் மஷாயக் ஹஸ்ரத் நிஜாமுத்தீன் ஔலியா அவர்கள் தம் ரகசிய ஒளியைக்கொண்டு மௌலானுவின் மனோபாவத்தை கண்டறிந்து “மௌலானு! தாங்கள் முகர்ந்தது சாம்பிராணி வாசனை

யல்ல; அவ்வாசனை வேறொரு வஸ்துவின் வாசனையாகும்" என்று கூறினார்கள்.

சுப்ஹானல்லா! எந்ததோர் பரிபூரண ஔலியாக்கள் தங்கள் விலாயத்தில் உள்ள 'குத்பியத்' என்னும் பதவியைக் கடந்து மஹபூபி, மாஷூகி என வழங்கப்படும் தர்ஜாக்களை (பதவிகளை) அடைந்து விடுகிறார்களோ அவர்கள் உள்ளமையானது அல்லா உடைய அருளைக் கொண்டு பிறர் உள்ளத்தின் ரகசியத்தையும் வெளிப்படுத்தக் கூடியதாய் விடுகிறது. அவர்கள் நாட்டத்தில் அல்லா உடைய நாட்டமும் பக்க பலமாய் விடுகிறது. புனித பேரின்பக் காதலின் பொருட்டு காதலர் சரீரங்களே பறைவான பரிமளத்தைக் கொண்டு மணந்து போகின்றன. எந்த பரிசுத்தவான்கள் அவர்களிடத்திற்குச் செல்லுகிறார்களோ, அந்த நாதாக்களின் பரிசுத்த மணத்தின் உணர்ச்சியை அடைந்து விடுகிறார்கள்.

எனவே, ஹஸ்ரத் சுல்தானுல் மஷாயக் நிஜாமுத்தீன் ஔலியா மஹபூபே இலாஹி (அல்லாவுக்கு பிரியமுள்ளவர்கள்) அவர்களின் நற்கீர்த்தியானது சூரிய ஒளிவுக்கொப்பாக தலை சிறந்து விளங்கி வருவதிலிருந்தே ஔலியாக்களுக்கிடை அவர்களும் மிக்க உயரிய பதவியடைந்தவர்கள் என்ற உண்மை சொல்லாமலே விளங்கும்.

ஹஸ்ரத் நிஜாமுத்தீன் ஔலியாவின் முர்ஷிதாகிய ஹஸ்ரத் ஷய்க் பரீதுத்தீன் அவர்களால் அருளப்பட்டிருந்த புனித வஸ்திரத்தை இப்போது ஹஸ்ரத் ஔலியாவே தம் கைபட காஜி முஹையத்தீன் என்பருக்கு கொடுத்து விட்டார்கள்.

அந்த வஸ்திரத்தில் இன்பகரமானதோர் வாசனை வெளியாய்க் கொண்டிருந்தது. காஜி அவர்கள், அதை வாங்கினவுடன் தன் தலைமேல் வைத்தெடுத்து நேரே வீட்டிற்கு கொண்டு வந்து மிக்க ஜாக்கிரதையாக அவ்வரிய ஞாபகச் சின்னத்தை பாது காத்து வந்தார்.

வஸ்திரத்தின் வாசனை தற்காலிகமானது என்றே அவர் எண்ணியிருந்தார். ஆனால், எத்தனையோ நாட்கள் கழிந்த பின்னரும் அவர் அதை யெடுத்து முகர்ந்த போது ஏற்கனவேயுள்ள வாசனையைக் காட்டிலும் அதிக வாசனையே இருக்கக் கண்டு பிரமித்து விட்டார்.

வஸ்திரத்தை நன்றாய்த் துவைத்தும் கழுவியும் அதனை காற்று வெயிலில் உலர்த்தியும் சோதித்தபோது அவ்வளவுக்கவ்வளவு அதன் வாசனை அதிகரித்துக் கொண்டே இருந்தது. அதன் பேரில், அவர் தம் வியப்பை சகிக்க முடியாமல் நேரே ஹஸ்ரத் நிஜாமுத்தீன் ஔலியா விடத்திற்குச் சென்று அதைப் பற்றிச் சொன்னார்

"சகோதரரே! அந்த வாசனை உள்ளன்பிற்குரிய வாசனையாகும். அல்லாஹுதஆலா அதைத் தன் அன்பர்களுக்கு தந்தருள்கிறான்" என்று சொன்னார்கள்.

ஹஸ்ரத் நிஜாமுத்தீன் ஔலியா அவர்களுக்கு முதன் முதல் டில்லியில் மிக்க செலவு கஷ்டம் ஏற்பட்டிருந்தது. அவர்கள் தம் சிஷ்யர்களுடன் பெரும்பாலும் பசி பட்டினியாகவே காலங்கழித்து வந்தார்களென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இப்படியாக இருந்து வரும் காலத்தில் ஹஸ்ரத் அவர்கள் வசித்து வந்த ஜாகைக்கருகில் ஓர் கிழவியும் வசித்து வந்தார். அவா பருத்தி நூல் இழைத்து அன்றாடம் கிடைக்கும் கூலியைக் கொண்டு கஞ்சி காய்ச்சி அதனால் நோன்பு திறப்பது வழக்கம்.

ஒரு நாள் அக்கிழவியாருக்கு அயல் வீட்டு பகீர்கள் யாவரும் பட்டினியாகக் கிடக்கும் தகவல் கிடைத்தது.

உடனே அவர் அச்சமயம் தம் கைவசமிருந்து வந்த அரைச் சேர் கோதுமை மாவு ஹஸ்ரத் ஔலியா அவர்கள் சமுகத்தில் கொண்டு வந்து சமர்ப்பித்தார். ஹஸ்ரத் அதைப் பெற்று, ஷய்க் கமாலுத்தீன் யாகூப் அவர்களுக்கு அந்த மாவைக் கொண்டுபோய் ஒரு பானையில் போட்டு, அதில் தண்ணீர் விட்டு கஞ்சி காய்ச்சும்படி ஆக்ஞாபித்தார்கள்.

மாவு காய்ச்சியான பின் அதை ஏழை முஸாபிர்களுக்கு கொடுத்து விடலாம் என்பது அவர்கள் நோக்கம்.

ஷய்க் கமாலுத்தீன் என்பவர், உத்திரவிற்கிணங்க, அந்த மாவை எடுத்துச் சென்று, பானையில் அதை ஜலத்துடன் கலந்து உலையில் வைத்தார்கள்.

இரண்டொரு கொதிப்புகள் வருவதற்கிடையே பக்கிரியொருவர் அலங்கோலமாக ஓடி வந்து ஔலியா அவர்கள் முன்னிலையில் "நிஜாமுத்தீனே! சாப்பாடு ஏதேனும் இருந்தால் கொண்டு வந்து கொடு" என்று உரத்த சப்த மிட்டார்.

"சற்று பொறும், சமையல் ஆய்க்கொண்டிருக்கிறது" என்ற பதில் கூறப்பட்டது.

மீண்டும் பகீர், "நீயே எழுந்திருந்துபோய் அந்த பானையை அப்படியே எடுத்து வந்து என் எதிரில் வை" என்று ஹஸ்ரத் ஔலியாவுக்கு சொன்னர்.

அதைக் கேட்ட ஹஸ்ரத் ஔலியா எழுந்துபோய் அடுப்பின் மீதுள்ள சூடான சட்டியை தம் வஸ்திரத்தின் ஆதரவால் பற்றிக் கொண்டு வந்து அந்த பகீருக்கு முன் வைத்ததும், பகீர் தம் வலது

கையை முழங்கை வரையில், பானைக்குள் நுழைத்து, சுடசுட கொதிக்கும் கஞ்சியையே யெடுத்து சூப்பத் தொடங்கினர். சூட்டின் உணர்ச்சி அவருக்கு ஏற்படாத விதத்திலேயே அதிலுள்ள கஞ்சியை யாவும் அவர் பருகி விட்டதுமன்றி கடைசியாக அந்த பானையையும் அவர் 'டொப்' என தரையின் மேலிட்டு உடைத்து விட்டார்.

பானை உடைந்ததும் பகீர் நிஜாமுத்தீன் ஒளலியாவை நோக்கி, "உனக்கு அந்தரங்க பாக்கியமோ 'பரீத்' (ஒளலியாவின் முர்ஷித் ஷய்க் பரீதுத்தீன்) கொடுத்து விட்டார். உன் பகிரங்க வறுமையை யாம் இதன் மூலம் உடைத்து விட்டோம் (போக்கி விட்டோம்)" என்று சொல்லியதும் அதே சமயம் மாயமாய் மறைந்து விட்டார். பகீர் வாக்கிற்கேற்பவே அந்த நாள் முதற்கொண்டு வறுமையின் கொடுமை குறைய ஆரம்பித்தது.

ஹஸ்ரத் சுல்தானுல் மஷாயக் நிஜாமுத்தீன் ஒளலியா அவர்கள் தொழுகைக்காக வெள்ளிக்கிழமை தோறும் தம் இருப்பிடமாகிய கியாஸ்பூரை விட்டும் "கேலுகடி" என்ற நகருக்கு கால்நடையாக நடந்து போவார்கள்.

அவ்வாறு நடந்து போய் வந்த சமயத்தில் ஒரு நாள் அவாகள மனதில் 'என்னிடம் குதிரை யிருந்திருந்தால் நான் அதன் மேலேறி போய்வர எவ்வளவு சௌகரியமாக இருந்திருக்குமே' என்ற விருப்பம் ஏற்பட்டது.

(தொடரும்.)


## பாலோவின் மர்மம்

இது ஒரு அருமையான துப்பறியும் கதை. இதில் ஒரு பாங்கை மோசம் செய்ய சிலர் எத்தனித்ததையும் அது கைகூடா வண்ணம் செய்து அவர்களின் திருட்டு யோசனைகளை வெளியாக்கிய துப்பறியும் ஷம்ஸின் செயல்களும் விளக்கப் பட்டுள்ளது.

இதன் விலை அணா 8

தேவையுள்ளோர் 9 அணா ஸ்டாம்பு அனுப்பி வைத்தால் புக்போஸ்ட் மூலம் அனுப்பப்படும்.

கிடைக்குமிடம்:—

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்

நெ. 20, ஹைரோடு, திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

# இரத்தச் சின்னம்

## (தொடர் கதை 6–வது பகுதி)

### 12-வது அத்தியாயம்.

ஹட்டன் தனது படுக்கை யறையில் கதவை தாளிட்டுக் கொண்டு பயத்துடன் அவசர அவசரமாக ஒரு வேலை செய்து கொண்டிருந்தான். சுமார் 25 வருடத்திற்கு முன் ஸான்டி நகரத்திலுள்ள ஜெயிலில் இவன் சிறை தண்டனை அனுபவித்து வரும் சமயம் இவனுக்கு பூட்ஸ் ரிபேர் செய்யும் தொழில் கற்றுக் கொடுக்கப்பட்டது. அப்பொழுது இவனும் அவ்வேலையை திறமையாக செய்து வந்தான். ஆனால் தற்போது அவ்வேலைக்கு மாற்றமாக, ஒரு கூர்மையான கத்தியைக் கொண்டு ஒரு ஜோடி பூட்ஸை துண்டு துண்டாக வெட்டிக் கொண்டிருந்தான். அன்று பத்திரிகையில் பெர்ரி தோட்டத்தில் ஒரு கால்லடி நன்றாக பதிந்திருப்பதாகவும் அதை யாருடைய தென்று போலீஸ் கவனித்து வருவதாகவும் போடப்பட்டிருந்தது. அதைப் பார்த்த பின்பே ஹட்டன் இவ்வேலையில் ஈடுபட்டான். பிறகு அத் துண்டுகளை நெருப்பில் போட்டு எறித்தான். எல்லா துண்டுகளையும் எறித்து, கைகளை கழுவிய பின், அறையின் கதவுகளைத் திறந்தான்.

தனக்குத் தானே, மனதில் தைரியம் சொல்லிக் கொண்டான். பெர்ரியின் தோட்டத்தி லிருந்து வந்ததை யாரும் பார்த்திருக்க முடியா தென்று நினைத்து, தனக்கு யாதொரு ஆபத்து மில்லை யென்று மெத்தையி லிருந்து கீழிறங்கி முன் அறையில் உட்கார்ந்தான். அவனது வேலைக்காரன் தேத்தண்ணீர் கொண்டு வந்து முன் வைத்து விட்டு, "தற்போதாவது அவரைப் பார்க்க முடியுமா ஸார்?" என்று கேட்டான்.

"என்ன? யாரை?"

"உங்களைச் சந்திக்க ஒருவர் முன்னால் காத்துக் கொண்டிருக்கிறா ரென்று முன்பே உங்களிடம் தெரிவித்தேனே."

அப்பொழுது தான், தான் பூட்ஸை தொலைப்பதில் முழு கவனத்தைச் செலுத்தும் போது வேலைக்காரன் கதவைத் தட்டியது ஞாபகம் வந்தது.

"யார் அவர்?" என்று வேலைக்காரனை ஹட்டன் கேட்டான்.

"அவர் கொடுத்த கார்டை மேஜையின் மேல் வைத்தேனே"

"நான் முக்கிய ஜோலியி லிருப்பதாக தெரிவித்தாயா ?"

"தெரிவித்தேன் ஸார். நீங்கள் உங்கள் வேலையை முடித்து விட்டு வரும் வரை யிருப்பதாகச் சொன்னார் ஸார்." என்று சொல்லிக் கொண்டே மேஜையின் பேரிலிருந்த கார்டை கொடுத்தான்.

ஹட்டன் அந்த கார்டைப் பார்த்ததும், நாற்காலியி லிருந்து சட்டென்று எழுந்தார். முகம் வெளுத்தது. கை கால்கள் நடுங்கின. "இன்ஸ்பெக்டர் பென்டன்! என்னிடம் எதற்கு வர வேண்டும் ?" என்று தனக்குத் தானே சொன்னார்.

பிறகு வேலைக்காரனைப் பார்த்து "அவரைக் கூப்பிட்டு வா" என்றான். ஹட்டன் இன்ஸ்பெக்டர் பென்டனை இதற்கு முன் பார்த்த தேயில்லை. தற்போது அவரைப் பார்க்க, அவர் சாதாரண ஒரு ஆளாகவும் பார்ப்பதற்கு பயப்படக் கூடிய தோற்றத்தை யுடையவராயில்லை.

"உட்காருங்கள் இன்ஸ்பெக்டர். நான் கொஞ்சம் வேலையாக யிருந்து விட்டேன்" என்றான் ஹட்டன்.

இன்ஸ்பெக்டர், ஹட்டனுக்கு முன்னுள்ள நாற்காலியில் உட்கார்ந்து "உங்கள் வேலை முடிந்த பின் சந்திக்கலா மென்றிருந்தேன். பெர்ரி கொலை விஷயமாக உங்களிடம் பேச வந்துள்ளேன்" என்றார்.

ஹட்டன் அதற்கு யாதும் பதில் சொல்லவில்லை. தனக்குள் ளிருந்த நடுக்கத்தை வெளிக்கு காட்டாமல் அடக்கியவாறு உட்கார்ந்திருந்தான்.

"உங்களுக்கு பெர்ரி நன்றாகத் தெரியு மல்லவா ?" என்று இன்ஸ்பெக்டர் கேட்டார்.

"நன்றாகத் தெரியுமென்று சொல்லமுடியாது, வியாபாரவிஷயமாக சந்தித்திருக்கிறேன்"

"இதற்குமுன் சந்தித்திருக்கிறீர்களா ?"

ஹட்டன் சிறிது பதில் சொல்ல தயங்கினான். சாதாரணமாக பொய் சொல்ல தயங்கமாட்டான் இந்த ஹட்டன்; அவனது சுபாவமே உள்ளதை மாற்றிச் சொல்வது.

"இல்லை, அநேக ஆண்டுகளுக்கு முன் பார்த்திருக்கிறேன். அவர் தாடி யிருக்கும்போது பார்த்திருக்கிறேன்"

"நீ தற்போது அவரைச் சந்திக்க போகும்போது அவர் எங்கிருந்தார்"

"மெத்தையின் வராண்டாவில் நின்று கொண்டிருந்தார்"

"நீர் பார்த்தீரா ?"

"ஆம் பார்த்தேன்"

"நீங்கள் ஏதோ காரணமில்லாமல் பயந்து அலறியதாகக் கேள்வி பட்டேன். காரணம் சொல்லமுடியுமா ?"

"அது ஒன்றுமில்லை. எனக்கு மார்பு நோய் அடிக்கடி வருவதுண்டு அதைச் சேர்ந்தது"

"திடீரென்று பெர்ரியைப் பார்த்ததும் பயந்தீர்களா ?"

"இல்லை இல்லை. பெர்ரியைப் பார்த்து நான் ஏன் பயப்படவேண்டும் ? அவர்தான் எனக்கு அதிக பழக்கமானவராயிற்றே"

"அநேக ஆண்டுகளாக அவரை சந்திக்கவில்லை என்கிறீர்களே ?"

"அநேக ஆண்டுகளாக நான் பார்க்கவில்லை. ஆனால் எங்களுக்குள் கடிதப்போக்கு வரத்து உண்டு"

"அப்படியாகில் நீங்கள் பயந்து அலறியதற்கு காரணம் உங்கள் மார்பு நோய் தானா?"

"ஆம்"

"இன்னொன்று உங்களிடம் கேட்கவேண்டும்.

நீங்கள் பெர்ரியைச் சந்திக்கவரும்போது, குறுகிய முனையுள்ள பூட்ஸ் அணிந்திருந்தீர்களல்லவா ?"

"எனக்கு ஞாபகமில்லை"

"நீங்கள் ரெயில்வேஸ்டேஷனிலிருந்து நேராக பெர்ரி வீட்டிற்கு வந்தீர்களே, அதுவல்லாமல் தோட்டத்தில் உலாவினீர்களா ?"

"இல்லை"

"நல்லது அன்று அணிந்த பூட்ஸை எனக்கு காண்பிக்க முடியுமா ?"

"இதோ கொண்டுவருகிறேன்" என்று சொல்லி ஹட்டன் மெத்தைக்குப்போய் அங்கிருந்து குறுகிய முனையுடைய பூட்ஸ் இரண்டை கொண்டு வந்து காண்பித்தான்.

பென்டன் அதை வாங்கி திருப்பி திருப்பி பார்த்தபின், "அன்று நீங்கள் இதை அணியவில்லை. இதன்மேல் தூஸி படிந்திருக்கிறது, அன்று மழை பெய்து தரை ஈரமாக யிருந்தது. இதை உபயோகித்திருந்தால் இதில் மண் காய்ந்து படிந்திருக்கும்" என்றார்.

"அது தூஸி அல்ல மண் காய்ந்தது போல் தெரிகின்றது" என்று ஹட்டன் சொன்னான்.

187035

"இல்லை நீங்கள் சொல்வது தவறு" என்று இன்ஸ்பெக்டர் சொல்லி பூட்ஸை கீழே வைத்துவிட்டு எழுந்து நின்றார். எழுந்து நின்றவர் போகவும் இல்லை ஹட்டனுடன் ஒன்றும் பேசாமல் கீழே தரையைப் பார்த்தவாறு நின்றார். எழுந்தவர் உடனேபோய் விடுவார் என்று நினைத்த ஹட்டனுக்கோ பயமதிகரித்தது "இன்னும் ஏதும் கேட்கவேண்டுமோ" என்று இன்ஸ்பெக்டரிடம் கேட்டான்.

"ஆம்! உங்களது தையல்காரரின் பெயரும் விலாசமும் வேண்டும் தயவுசெய்து ஒரு காயிதத்தில் எழுதி கொடுங்கள்" என்று இன்ஸ்பெக்டர் கேட்டார்.

"எனது தையல்காரன் விலாசமா! அவன் விலாசம் எதற்கு? உங்கள் கேள்வியும் நூதனமாகவிருக்கிறது! எதற்கும் நீங்கள் கேட்டபடி தந்து விடுகிறேன்" என்று சொல்லி மேஜையில் இருந்து ஒரு காகிதத்துண்டை எடுத்து தனது தையல்காரனின் அட்ரஸை எழுதிக் கொடுத்தான். இன்ஸ்பெக்டர் அந்த காயிதத்தை வாங்கி அதில் என்ன எழுதியிருக்கிறது என்றுக் கூடப்பார்க்காமல் மடித்து ஜேபில் வைத்துக்கொண்டு "உங்களுக்கு மிக கஷ்டத்தைக் கொடுத்து விட்டேன் மன்னிக்கவேண்டும். என்ன செய்வது! பெர்ரியை கடைசியாக சந்தித்த ஒவ்வொருவரையும் விசாரிப்பது எனது கடமை. அந்த இரத்தச் சின்ன சங்கம்......."என்று இன்ஸ்பெக்டர் சொல்வதற்குள் "இரத்த சின்ன சங்கமா!" என்று பெருமூச்சு விட்டுக்கொண்டு ஆச்சரியத்துடன் கேட்டான்.

"ஏன் உங்களுக்கு தெரியாதா இந்த கொலைக்கு காரணம் இரத்த சின்ன சங்கம்தானே" என்று இன்ஸ்பெக்டர் கேட்டார். ஹட்டனுக்கோ இவ்விஷயம் தெரியாது. அன்று எல்லா பத்திரிகைகளிலும் பெர்ரி கொலையுண்ட விஷயம் போடப்பட்டிருந்ததை தவிர இரத்த சின்னத்தை பற்றி குறிக்கப்பட வில்லை. ஆனல், ஒரே ஒரு பத்திரிகையில் மட்டிலும் இக்கொலைக்கு காரணம் இரத்தச் சின்னம் என்று போடப்பட்டிருந்தது. ஆனல் அப்பத்திரிகையை ஹட்டன் படிக்க வில்லை. "இரத்த சின்னத்தினல் கொலையுண்டது எனக்கு தெரியாது. அதுவுமல்லாமல் அதைப்போல் ஒரு உண்மையான சங்கம் இருப்பதாக நான் எண்ணவில்லை" என்று சொல்லவே இன்ஸ்பெக்டர் வேறு ஒன்றும் ஹட்டனிடம் கேட்க வேண்டியதில்லை என்று எண்ணி அங்கிருந்து புறப்பட்டார். இன்ஸ்பெக்டர் சென்று சுமார் ஒரு மணி நேரம்வரை ஹட்டன்தான் உட்கார்ந்திருக்கும் நாற்காலியை விட்டு நகரவில்லை. இரத்த சின்ன சங்கத்தைப் பற்றியே எண்ணிக் கொண்டிருந்தான். பிறகு "இது ரொம்ப மோசமானது. நாமும் கிளம்ப வேண்டியதுதான்" என்று சொல்லிக் கொண்டே தனது பாங் கணக்கைப் பார்த்தான். கணக்கைப் பார்த்து சந்தோஷமாகி "இன்னும்

பணத்தை எடுத்துக் கொள்ள வேண்டியதுதான்" என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டான்.

## 13-வது அத்தியாயம்.

இரத்த சின்ன சங்கத்தின் புதிய அங்கத்தினருக்கு வேலை சுலபமாக கிடைத்தது. குளோரியா போனதும் மாரிஸ் ஒன்றும் கேள்விக் கேட்காமல் வேலையில் அமர்த்திக் கொண்டார். ஒரு வாரமாக அவள் அங்கு வேலைச் செய்து கொண்டிருந்தும் இரத்த சின்ன சங்கத்தின் கடிதம் ஒன்றும் கிடைக்க வில்லை. மாரிஸூம் இவளை தனியாக கண்டு ஒன்றும் பேசவில்லை.

சுமார் ஒரு மாதத்திற்குப்பின் தனது மேஜையின் பேரில் ஒரு கடிதம் வைக்கப்பட்டிருந்தது. அதில் இரத்த சின்ன குறி ஒன்றும் இல்லை அதில் அச்செழுத்தில்"ஹட்டனுடன் சகவாசம் வைத்துக்கொள். ஹட்டனிடம் மாரீஸ் பயப்படுவதற்கு காரணத்தையறி. பாங்கில் ஹட்டன் பணம் எவ்வளவு இருக்கிறது என்பதை எனக்கு தெரிவிப்ப துடன் அவனுடைய பணததை எல்லாம் வாங்கிக் கொண்டு கணக்கை முடித்த உடன் தெரிவிக்கவும். துப்பறியும் ஸிம்ஸனும், பென்டனும் பாங்குக்கு வந்தால் தெரிவி. எல்லா விஷயத்திற்கும் கீழ்கண்ட விலா சத்திற்கு தந்தி மூலம் தெரிவி:– பிரவ்ன், நெம்பர் 55, பேக்கர் தெரு." குளோரியா அந்த கடிதத்தில் சொன்னபடியே நடந்துக் கொண்டாள். ஹட்டனை உடனே சந்திக்க வில்லை, சில தினங்களுக்கு பின் சந்தித் தாள். துப்பறியும் ஸிம்ஸன் ஓரே ஒரு முறை பாங்க் வந்து சென்றார். அதை உடனே இரத்த சின்ன சங்கத்திற்கு தெரிவித்து விட்டாள். அவள் இன்ஸ்பெக்டரையும், டாமையும் பார்க்கவே யில்லை. டாம்மை பற்றியும் நினைக்க வில்லை.

மாரிஸ் தனது அறையில் ஏதோ யோசித்துக் கொண்டே உட்கார்ந் திருந்தார். எதிரே ஒரு பருமனுன மனிதன்கால் மேல் கால் போட்ட வாறு உட்கார்ந்திருந்தார்.

"மிஸ்டர் ஹட்டன்! என்னை நீங்கள் சங்கடமான நிலைமையில் இழுக்கிறீர்கள். என்னை மிகவும் நெருக்குகிறீர்கள்" என்று கெஞ்சம் தோரணையில் மாரிஸ் சொன்னர்.

"நீங்கள் ஏன் பயப்படுகிறீர்கள். உங்களுக்கு நல்ல செக்கியூரிடி கொடுக்கின்றேனே நீங்கள் பயப்படவேண்டிய தில்லை" என்று ஹட் டன் திருப்பி சொன்னுன்.

"நீங்கள் என்னை முடியாத காரியத்தை ஏவுகின்றீர்கள். இது வரை முட்டாள் தனமாகவே நீங்கள் சொல்கிறபடியே செய்து வந்தேன். இதற்கு ஒரு முடிவு வேண்டும். தற்போது உங்களுக்கு

பணம் தேவை என்பதற்கு காரணமே இல்லை. இதே பாங்கில் உங்கள் பெயரால் ஒரு லக்ஷம் பவுன் இருக்கிறது'' என்று கொஞ்சம் தைரியத்துடன் மாரிஸ் சொன்னார். அதைக் கேட்ட ஹட்டன் தன்னை சுற்றிப் பார்த்தான். அங்கு வேறு யாரும் இல்லை என்று அறிந்த உடன் முன்னால் மேஜையில் சாய்ந்தவாறு தாழ்ந்தக் குரலில் "நான் உங்களுக்கு ஒரு சிறிய கதைச் சொல்லப் போகிறேன் கேளுங்கள். லுயிஸ் பாங்கில் சொர்ப்ப சம்பளத்திற்கு கிளர்க்கு வேலை செய்து வந்த ஒருவன் அந்த பாங்கின் சொந்தக்காரர் லுயிஸ் இறந்ததும் லூயிஸின் பெண்ஜாதியை மணந்தான். அவளுடைய வயதை நோக்குங்கால் அவளை இவனது தாய் என்றுக் கருதலாம். சில நாட்களுக்கு பின் சுவிட்ஸர்லாண்ட் ஊரில் ஒரு மலையிலிருந்து கீழ் விழுந்து இறந்தாள். நான் அதே சமயத்தில் அந்த மலையின் இயற்கை அழகை பார்த்து அதிசயித்து ஒரு புகைப்படம் (போட்டோ) எடுத்தேன். தற்செயலாக நான் புகைப்படம் எடுத்த நேரமும் அவள் விழுந்த நேரமும் ஒத்து விட்டது. அந்தப் படத்தை உங்களிடம் காண்பிக்கவில்லையல்லவா? அந்த படத்தில் நீங்களும் இருக்கிறீர்கள். ஆனால் அவள் இறந்ததைப் பற்றி விசாரணை நடக்கும்போது மாஜிஸ்ட்ரேட் முன்பு, நீங்கள் அவள் இறக்கும் சமயம் அங்கில்லை யென்றும் எத்தனையோ மைல்களுக்கப்பால் யிருந்ததாகவும் தெரிவித்திருக்கிறீர்கள்'' என்று ஹட்டன் சொல்லும்போது, மாரிஸ் அவனைப் பார்க்காமல் கீழே குனிந்தவாறு ஒன்றும் பதில் சொல்லாமலிருந்தார்.

"அதுவு மல்லாமல் நீர் இன்னொரு ஏற்பாடு செய்து கொண்டு வருகிறாய். இன்னுமொரு பணக்காரியைக் கலியாணம் செய்யவோ, என்னமோ!'' என்று ஹட்டன் சொல்ல, மாரிஸ் ஆச்சரியத்துடன் கண்களை விடுத்தவாறு ஏறிட்டுப் பார்த்தார்.

"நீங்கள் எதைப் பற்றி சொல்கிறீர்கள் ?'' என்று கோபத்துடன் கேட்டார் மாரீஸ்.

"அன்று இரவு எட்வர்ட் ஸ்கொயரில் ஒரு ஆளை சந்திக்கவில்லையா—ஒரு காரில் ஒருவர் வந்தாரே ! நான் தான் பார்த்துக் கொண்டிருந்தேனே ! என்னிடம் மறைப்பதில் பிரயோஜனமில்லை'' என்றான் ஹட்டன்.

முன் பக்கம் சரிந்தவாறு கேட்டுக் கொண்டிருந்த மாரிஸ் எட்வர்ட் ஸ்கொயரில் நடந்த சந்திப்பை தெரிவித்ததும், சோர்ந்து பின் பக்கம்

சாய்ந்தார். ஏதோ உதவியை நாடியவாறு மேலே நோக்கினர். பிறகு "நீங்கள் கேட்ட தொகைக்கு ஏற்பாடு செய்கிறேன்" என்றார்.

ஹட்டன் முகம் சந்தோஷத்தால் மலர்ந்தது. அதே சமயத்தில் அறையின் கதவை தட்டி, உத்திரவு கிடைத்ததும் உள் நுழைந்தாள் குலோரியா. அவள் ஏதோ ஒரு காயிதத்தை மாரீஸ் முன் வைத்து, கையெழுத்துக்காக நின்றாள்.

அவளைப் பார்த்த ஹட்டன் "ஆஹா! என்ன அழகு!" என்று தனக்குத்தானே சொல்லி, அவளை இமை கொட்டாமல் பார்த்து பெருமூச்செரிந்தான். ஹட்டனுக்கு சாதாரணமாக பெண் பைத்தியம் அதிகம். அதிலும் மிக அழகு வாய்ந்த குலோரியாவைப் பார்க்கவே, "இவளை எவ்வாறும் தானடைய வேண்டும்" எனும் எண்ணம் மேலிட்டது.

அவள் அறையினின்றும் சென்றதும் "ஆஹா! இவள் ராணியா? எங்கோ பார்த்த ஞாபக மிருக்கிறது. இவள் பெயரென்ன?" என்று மெதுவாக ஹட்டன் கேட்டான். "குலோரியா" என்று மாரீஸ் சொல்ல, "என்ன அருமையான பெயர்! இவள் தானே கிரீனிடம் வேலை பார்த்து வந்தவள்? தற்போது நீங்கள் அன்புடன் இவளை பாராட்டி வருகிறீர்கள் போலும்" என்று கேலியாக ஹட்டன் சொன்னான்.

உடனே மாரீஸ் கோபத்துடன் "அது என்னுடைய வழமையல்ல. அவள் இங்கு வேலை பார்த்து வருகிறாள். வேலை ஒழுங்காக செய்கிறாள். அவ்வளவு தான் எனக்குத் தெரியும்" என்று பதில் சொன்னார்.

ஹட்டன் எழுந்து "நமது விஷயத்தைப் பற்றி நாளை வருகிறேன்" என்று சிறித்துக் கொண்டே சொல்லி சென்றான். ஆனால் மாரீஸோ சிறிக்கவில்லை,

ஹட்டன் சென்றதும், மாரீஸ் எழுந்து அறையின் கதவை உள் பக்கம் தாளிட்டு வந்து மேஜையின் முன் உட்கார்ந்து, ஒரு வெள்ளை கார்டை எடுத்து, சிகப்பு மையால் ஒரு வட்டம் வரைந்து அதன் கீழ் "நாம் எட்வர்ட் ஸ்கொயரில் சந்தித்ததை ஹட்டன் பார்த்திருக்கிறான். அவன் வசிப்பது:—நெ. 33, ஸ்டெயின் பிளேஸ்." என்று எழுதி அந்த கார்டை ஒரு கவரினுள் போட்டு மூடி, அதன் மேல் "பிரௌன், 55, பேக்கர் தெரு" என்று எழுதினர். (தொடரும்.)

(1-வது பகுதி)

பண்டை அரபு நாட்டு வள்ளல்

# ஹாத்திம் தாயீ வாழ்க்கை வரலாறு.

டி. எப். ஆர். மஆலி சாஹிப் (பாகவி)

கொஞ்ச நாளைக்கு முன் சினிமாத் திரையில் மௌனப் படமொன்று காட்டப் பட்டது. நான்கு வாரம் தொடர்ந்து காட்டப்பட்ட சீரியல் படம் அது. அதன் பெயர் "ஹாத்திம் தாயீ" என்பதாகும்.

தன்னலம் பாராது பிறர் நலத்துக்காகவே தன் உடல், பொருள், சுகம் சானம் அனைத்தையும் அர்ப்பணம் புரிந்து ஆயுளெல்லாம் அறப் பணியாற்றிய பண்டைய அரபுச் சீமான் ஒருவரின் பெயரே 'ஹாத்திம் தாயீ' என்பது. தாயீ என்ற குலத்தில் பிறந்த ஹாத்திம் என்று அதற்குப் பொருள்.

ஹாத்திம் என்பார் அக்காலத்தில் இணையில்லா தர்மப் பிரபுவாய் விளங்கினர். தானத்தில் சிறந்திருந்ததைப் போல், தீரத்திலும் சிறந்திருந்தார். ஜன சமூக சேவைக்காக, தேச சஞ்சாரம் செய்து வந்தார். அப்படிப்பட்ட பண்டைய அரபு நாட்டுப் புருஷச் சிரேஷ்டரின் வாழ்க்கை வரலாறே இக்கட்டுரை :

## ஹாத்திம் தாயீ யார் ?

பண்டைகால அரபு நாட்டுக் கொடை வள்ளல் ஹாத்திம் தாயீயைப் பற்றி அறியாத முஸ்லிம்கள் இல்லை. இக்காலக் கொடை வள்ளல்களைப் பற்றிப் புகழும் போதும் நாம், 'இவர் நிகழ்கால ஹாத்திம்' என்று சொல்கின்றோமல்லவா? மேலும் ஹாத்திம் தாயீ என்றவுடன் அவருடைய வீர தீர தயாளச் செயல்களைப் பற்றிக் கூறப்படும் விகசிதமான கதைகள்தான் நம் ஞாபகத்துக்கு வருகின்றன. ஹாத்திம் தாயீயின் கதைகள் படிக்க ருசிகரமாயும், சொல்ல இன்பகரமாயும், நினைக்க மனோகரமாயும் இருக்கின்றன. ஆம், தனக்கென வாழாப் பிறர்க்குரியராய் வாழ்ந்து மனித சமூகத்துக்கு பேரூழியம் புரிந்த பெரியாரல்லவா அவர்? அவரைப் பற்றிய கதைகளில் மெய்யுடன் ஒரு சிறிது பொய்யும் கலந்திருந்த போதிலும் அதை யெல்லாம் நாம் பொருட் படுத்துவதில்லை. ஆயினும் அவருடைய தியாக குணத்திற்காகவும், அவருடைய உதாரத் தன்மைக்காகவும், அவர் யாருக்கும் இல்லை யென்னாது கொடுத்து ஆதரித்த வள்ளல் தன்மைக்கும் அவரை உத்தமர் உலகம், உலகமுள்ளளவும் மறக்கமாட்டா தென்பது திண்ணம். அப்படிப்பட்ட உத்தம உதார புருஷரைப் பற்றி நாம் வெறுமனே புகழ்ந்து பாராட்டி கதைகள் சொல்லிக் கொண்டிருப்பதோடு இருந்து விடக் கூடாது. அவர் யார்? எந்நாட்டவர்? எக்காலத்தவர்? இஸ்லாத்துக்கும் அவருக்கும் என்ன சம்மந்தம்? என்பன போன்ற வரலாறுகளை நாம் சிறிதேனும் ஆராய்ந்தறிந்து கொள்வது கடமையாகும்.

ஹாத்திம் தாயீ வள்ளலைப் பற்றிய கதை ஆதியில் அரபு மொழியில் இயற்றப் பட்டது. ஆம். அவர் அரபியர் தானே! அந்த அரபு நாட்டுக் கதை பின்னர் பாரசிக மொழியிலும், அப்பால் உர்தூ மொழியிலும் பெயர்த் தெழுதப்பட்டது.

முனீர் ஷாமீ என்ற அரபு வாலிபன் ஹுஸ்னு பானு என்ற பாரசிக அழகு ராணி மீது காதல் கொண்டானாம். ஹுஸ்னு பானு சாதாரண பெண்ணல்ல; மகா விவேகி; கல்வி யறிவில் சிறந்தவள்; லோக அறிவு மிக்கவள். அவள் ஏழு கேள்விகள் போட்டாள்.

"யார் இந்த ஏழு வினக்களுக்கும் தக்க விடைகளை கண்டறிந்து வந்து, பதில் கூறி தன்னை சமாதானம் செய்வாரோ அவரையே மணப்பேன்" என்று சபதம் கொண்டிருந்தாள். இந்தக் கடும்சபதத்தை முனீர் ஷாமியால் நிறைவேற்ற முடியவில்லை; வருந்தி உழன்றான்.

ஹாத்திம்தாயீ, அவனுக்காக தான் சபதம் மேற் கொண்டார்; தியாகம் புரிந்தார்; நாடுகள் தோறும் சென்று பற்பல துன்பங்கட்கும் அல்லல்கட்கும் ஆளாய், வினக்களுக்கு விடைகள் அறிந்து வந்து ஹுஸ்னு பானுவுடைய சபததை முறித்து வெற்றி பெற்றார். ஆனால், தன் சபதப்படி, ஹுஸ்னு பானுவை முனீர் ஷாமுக்கே மணமுடித்து வைத்தார்—இது தான் வழங்கும் கதை!

நம் நாட்டில் தமிழிலும் ஹாத்தின் தாயியைப் பற்றி கதைகள் இரண்டொன்று வெளியிடப்பட்டிருக்கின்றன. இக்கதைகள் ஆங்கிலம் பிரஞ்சு, ஜெர்மனி மொழிகளிலும் மேனுடுகளில் பலவழங்கி வருகின்றன. அதைப்பற்றி யெல்லாம் நாம் இங்கு ஆராய வேண்டிய அவசியமில்லை.

பொதுவாய் கல்வியறிவு உடையவர்கள்—குறிப்பாய் கதைகள் படிப்பதில் ஆர்வமுடையவர்கள்—ஹாத்திம் தாயியைப் பற்றி ஓரள வேனும் அறிந்திருக்கின்றனர். விசேஷமாய் முஸ்லிம்கள் இவ்வள்ளல் சிரோமணியை பெருமிதமாய்க் கொண்டாடுகின்றனர். முஸ்லிம் சிறுவர்களும் ஹாத்திம் தாயியைப்பற்றித் தெரிந்திருக்கின்றனர். உர்தூ படிக்கத் தெரிந்த ஒவ்வொரு சிறுவனும் ஹாத்திம் தாயீயின் கதைகளைப் படித்தே தீருவான். அங்ஙனம் அதைபடிக்காவிடில், அவன் உர்தூ இலக்கியத்தை அறியாதவன் என்றுதான் கருதப்படுவான்.

மதோபதேசம் புரியும் முஸ்லிம் பிரசங்கிகள் கூட, தம் உபக்கியாஸங்களில் ஹாத்திம் தாயீயின் கொடைவள்ளல் தன்மைகளைப்பற்றி சாங்கோபாங்கமாய் எடுத்தோதி, பாமர மக்களுக்குத் தான தர்மத்தின் சிரேஷ்டத்தை உபதேசிப்பார்கள். இதன் காரணத்தில் பசவிஷயங்களில் கூட ஹாத்திம் தாயீயின் நற்பெயர் இடம் பெற்றுக்கொண்டு விட்டது.

ஹாத்திம் தாயீயைப்பற்றிய கதைகளில் ஜின், பரீ, பூதம் எல்லாம் வரும். அவ்விநோத சிருஷ்டிகளின் விபரீதச் செயல்கள் விசித்திரமாகவும் விநோதமாகவும் இருக்கும். ஹாத்திம்தாயி, அந்த ஜின்களுடனும், பூதங்களுடனும், பரீ எனப்படும் வனதேவதைகளுடனும் புரியும் வீரதீரப் போர்களும், நேச உறவுச் செயல்களும் மகா மகா ஆச்சரியமாகவும் அற்புதமாகவும் இருக்கும். ஆதலினால்தான் ஹாத்திம்தாயீயின் வீரதீர தயாளக்கதைகள் "அலபு லைலா" எனப்படும் அரபுநாட்டுக் கதைகள்போல் ஆர்வமாய் அனைவராலும் படிக்கப்பட்டும் பாராட்டப்பட்டும் வருகின்றன.

கதைக்கு காலுமில்லை வாலுமில்லை யென்று சொல்லப்படுவதுண்டு. அவ்வாறே ஹாத்திம் தாயியைப்பற்றிய கதைகளில் சில வற்றிற்கு வாலோ தலையோ அல்லது உடலோ இல்லாமற்போயினும் படிப்பதற்கு மிக ருசிகரமாயும், மனித கோடிகட்கு நல்ல நீதி போதங்கள் புகட்டுபவையாயிருக்கின்றன வென்பதில் ஐயமில்லை. நீதி புகட்டும் நல்ல கதைகளில் ஓர் அளவு பொய்யோ, புனைப்போ கலந்திருந்தாலும் அதை அறிவாளிகள் ஆக்ஷேபிக்கமாட்டார்கள். மோரில் தண்ணீர் கலந்திருக்கிற தென்பதற்காக நாம் மோர் சாப்பிடாமல் இருந்துவிடலாமா? தண்ணீர் கலப்பினால்தான் மோர் மோராக ருசிக்கிறது. அங்ஙனமே கதைகளில் ஓரளவு புனைப்பு என்னும் கற்பனை கலந்திருப்பதனால்தான் அதை 'கதையாக' ருசிக்கின்றன. எனவே ஹாத்திம் தாயீயைப் பற்றி கதைகளும் இத்தகைய இனத்தைச் சேர்ந்தவையாயிருப்பதில் ஆக்ஷேபமொன்றுங் காட்டாது. கதையின் கருத்து நீதி போதனையே யாதலால், அதையாவரும் விருப்பிப் படிக்கவேண்டியதே யாகும்.

ஹாத்திம் தாயீயைப்பற்றிய கதைகளில் அப்பெரியாரின் லோக சஞ்சாரம், அனுபவங்கள், தானதருமங்கள், பரோபகாரங்கள், தியாகங்கள், உதார குணங்கள், சேவைகள் முதலியவற்றை விளங்கிக் எண்ணற்ற அரிய சம்பவங்கள் சித்திரிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் பல விசித்திரங்கள் நிறைந்தன. ஆனால் அவ்வுத்தம புருஷனின் உண்மை வரலாறுகள் நீறுக்குள் மறைந்த நெருப்புபோல் அடங்கிக் கிடக்கின்றது. மறைத்துக்கொண்டிருக்கும் சாம்பலைத் தள்ளிவிட்டு ஜோதிச்சுடரை நாம் காணவேண்டும். இதற்கு இஸ்லாமிய கிரந்தங்களிலிருந்து நமக்கு ஆதாரங்கள் காணக்கிடைக்கின்றன. இந்த இஸ்லாமிய கிரந்தங்களிலுள்ள சம்பிரதாயச் சரக்குகள், கற்பனைக் கதைகளைப் போல் ருசிக்க மாட்டா. எனினும் அப்பெரியாரைப்பற்றி உண்மை வரலாறுகளை உணர்ந்து கொள்ள உதவியாய் இருக்கும். எனவே, சில வரலாறுகளை ஈங்கு எடுத்துரைக்கின்றேன். (தொடரும்.)

Edited by M. S. ABDUL KHUDUS.
Published by Hajee M. A. Shahul Hameed & Sons.
Printed at Shahul Hameedia Press, Madras.

187035

# யூனானி வைத்திய முறைகள்.

(தமிழில்)

இந்த புஸ்தகம் பல உர்து கிதாபுகளிலிருந்து சேகரிக்கப் பட்டு தமிழில் மொழி பெயர்த்து எழுதப்பட்டது.

இதில் மனிதனுக்கு வரக்கூடிய நோய்களை பல தலைப்பு களுக்கு அடியில் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு தலைப்புக்கும் அடி யில் வரும் அநேக நோய்களுக்கும் பலவித மருந்துகள் கூறப் பட்டு இருக்கின்றன. இந்த மருந்துகள் நமது வீட்டிலேயே சொர்ப்ப செலவில் தயாரித்துக் கொள்ளக்கூடியவைகள். இதில் கூறப்பட்ட தலைப்புகள் :—

சிரசு சம்பந்தப்பட்ட நோய்கள், சரீர சம்மந்தப்பட்ட நோய்கள், தாது சம்பந்தப்பட்ட நோய்கள், பல்வேறு விஷ யங்களுக்கு பல்வேறு சிகிச்சைகள், மூலத்திற்கு பல்வேறு பாகங்கள், கழுத்து சம்பந்தப்பட்ட நோய்கள், காச சம்பந்தப் பட்ட நோய்கள், தோல் சம்பந்தப்பட்ட நோய்கள், பல்வேறு நோய்கள்.

இதில் குறிக்கப்பட்ட எல்லா நோய்களுக்கும் மருந்துகள் சொல்லப்பட்டிருக்கின்றன. சில இடங்களில் ஒரே நோய்க்கு சுமார் 40, 50. மருந்துகள் வரை விவரிக்கப்பட்டு இருக் கின்றன.

இந்த புஸ்தகம் ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டி யது என்று சொல்ல அவசியம் இல்லை. 282-பக்கங்களைக் கொ[illegible]டது. கலிகோ பைண்டு செய்யப்பட்டது.

இதன் விலை ரூபா. 3

---

கிடை[illegible]குமிடம்:—

ஹாஜி M. A. ஷாஹூல் ஹமீது & ஸன்ஸ்

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

அரை விலை!                    அரை விலை !!

# ஸுப்ஹான மௌலூது.

ஸுப்ஹான மௌலூது, யாஹெய்யதி பைத்து, யாகுத்பா பைத்து, யாஹெய்யதி ஷைகி பைத்து ஆகியவைகள் இந்த கிதாபில் அடங்கி இருக்கின்றன. இது பெரிய எழுத்துக்களில் எழுதப்பட்டு, போட்டோ அச்சில் சுத்தமாக பிழைகளில்லாமல் 10 அங்குல நீளமும் 7 அங்குல அகலமுள்ள கிதாபாக அச்சிடப்பட்டு, பைண்டு செய்யப் பட்டிருக்கிறது.

இதன் விலை ரூ. 1—8—0

9-11-54 தேதி வரை எங்களிடம் ஸ்டாக் இருக்கும் வரை ஒரே நேரத்தில் ஆறு கிதாபுகள் வாங்கினால் அரை விலையாக 12 அணு வீதம் கொடுக்கப்படும்.

---

கிடைக்குமிடம் :—

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்
20, ஹைரோட் திருவல்லிக்கேணி,
மதராஸ் 5.